காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

19—9—71

★

உள்ளே......

யுத்தம்—ஒரு தொடர்கதை
(அறிஞர் அண்ணா)

புரட்சிகர கல்வித் திட்டம்
(தலையங்கம்)

எழுத்தாளர் இல்லம்
(நாடகம்)

சோழமாதேவி
(தொடர் கதை)

விலை 20 காசு

வெளிநாடுகள் சென்று திரும்பிய அமைச்சர் மாதவனை முதலமைச்சர் மாலையணிவித்து வரவேற்கிறார்.

யுத்தம் ஒரு தொடர்கதை!

இந்திய எல்லையில் இப்போது போர் மேகம் சூழ்ந்துகொண்டிருக்கிறது. பாகிஸ்தானுக்கும் — இந்தியாவுக்கும்; சீனுவுக்கும் — இந்தியாவுக்கும் போர் நடக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது;. காரணம் எதுவாகவுமிருக்கட்டும். போர் என்றால் - அதன் விளைவுகள் பற்றி எண்ணினால் —

23—7—'50-இல் வெளிவந்த இந்த கட்டுரை பதில் சொல்கிறது; படியுங்கள்.

கலிங்கம் என்னைக் கலங்கச் செய்துவிட்டது-கண்ணீர் சொரிகிறேன் —சொரிந்து கொண்டே இருக்கிறேன் — மணிக்கணக்காய்— நாட்கணக்கில்! அதோ—அவர்கள் கண்களில் பொங்கி வழிகிறது நீர்— செந்நீர்—கொதிக்கும் குருதிமழை —ஆம் அவர்கள் கரங்களிலே விலங்குகள், கால்களில் இரும்புச் சங்கிலிகளின் பிணைப்பு...உடலில்வெட்டுக் காயங்கள், ஆறாத இரணங்கள்-உள்ளத்தில் மாறாத வடு —இவைகளைத் தாங்கி நடக்கிறார்கள் — ஒருவரா, இருவரா, இலட்சத்து ஐம்பதினாயிரம் வீரர்கள் — உலக சமூகத்துத் துடிப்புள்ள அணுக்களின் சோக மூச்சு. என் செவி புகுந்து என் சிந்தையைக் குடைகிறது!

பிண மலைகள்-ஈட்டி, வாள்களுக்கிடையிடையே சாகத் துடிக்கும் மனித உடல்களின் பரிதாபப் படப்பிடிப்பு — அப்பப்பா, கோரம், கோரம்! ஆயிரம், ஆயிரமாக மடிகின்றனர், மரணத்தோடு மல்லாடுகின்றனர்.

கழுகுகளின் கூட்டம், நரிகளின் ஊளைச் சத்தம், பிணநாற்றம், குருதிக்கறை, குறைபட்ட உடல்கள்— கண்போய், காதிழந்து, காலொடிந்து, கரம்நீங்கி...ஐயோ காணச் சகிக்காத காட்சிகள், நிகழ்ச்சிகள் இனி மகதத்தில் மட்டுமல்ல; இந்த மாநிலத்திலேயே இருக்கக் கூடாது —இருக்க விடக்கூடாது!

போர், போர்—கூடாது—குவலயத்தோர் குறித்துக் கொள்ள வேண்டும் இந்தக் கோட்பாட்டை; மனதிலிருத்திக்கொள்ளவேண்டும் இந்த இலட்சியச் சொற்றொடரை!

முரசு கொட்டட்டும் — இனி! ஆனால், போருக்காக அல்ல—அமைதியால் ஆனந்தமடைய! சமாதானத்தால் சாந்திபெற! சங்கு முழங்கட்டும். சாந்தம் வளரட்டும்.

யுத்தம்—அது அநாகரீகப் பேயின் சத்தம்! இனி என் செவியில் படக்கூடாது அந்தச் சத்தற்ற சாரமற்ற சொல் — எவருக்குமே கூடாது அந்தப் பித்தம்!

போரை ஒழித்துக்கட்ட இன்று கங்கணம்கட்டிவிட்டேன். கலிங்கம் தந்த கட்டளை இது—அங்கே நான் பார்த்த காலனின் கூத்துத் தந்த போதனை இது......

மனதிற்குள்ளே பேசிக்கொண்டான், மகதநாட்டு மன்னன், உலகப் பேரரசர்களில்ஒருவன் என வரலாறு வாழ்த்திடும் பெருமைக்குரியவன், அசோகன். அன்றுமுதல் அவன் ஆட்சிலே அதற்காகக் காரியங்கள் நடந்தன.

திக்கெட்டும் அவனுடைய சமாதானத் தூதுவர்கள் சென்றனர். போருக்குஎதிரிகளாகத் திரிந்தனர் அமைதி வாழ்விற்கு ஆதரவு திரட்டினர். சமாதான நிலைமைக்குத் தக்க விதைகளைத் தூவினர். அமைதி முளைத்தது. அன்புவளர்ந்தது. கொடுமைகள் களைந்தெடுக்கப்பட்டன. அறநெறி செழித்தது. சுகம் கிடைத்தது.

ஃ ஃ ஃ

போர் கூடாது என்றொரு மன்னனின் பொன்னான திட்டம்— அதனை அவன் பொறித்துக்காட்டிய ஸ்தூபி இன்று இந்நாட்டு ஆட்சிக் கொடியினிடையில்! — இருக்கிறது, பார்க்கிறோம்! எனினும் போருக்குச் சரிவு தேடும் போக்கிலே நாம் இல்லை —இருக்கிறோமா என்று எண்ணிப் பார்க்கவும் நேரமில்லை.

சென்ற போரில் உலக சமூகம் சருக்கி அடித்துக் கொண்டு விழுந்தது. அதனின்றும் இன்னமும் எழுந்து நிற்க முடியவில்லை. .கட்டுமரங் கட்டிகிட்டு, கடல் மேலே போனானே கடவுளே, காணாமல் போனானே கடவுளே, இன்னமும் திரும்பவில்லை கடவுளே, என்று போன யுத்தத்தில் பொசுங்கிப் போன சுபீட்சத்தைக் காணவில்லை —திரும்பவும். ஓடிஒளிந்த சுகம் இன்னும் தன் ஒளி முகங்காட்டி வெளியில் வரவில்லை சரியாக! அதற்குள் போர் —மீண்டும் யுத்தம் என்று நம்செவிகளில் படும் பொழுது நம் நெஞ்சு நிலைகுலைகிறது.

நொருங்கிக் கொண்டிருக்கும் கொரியாவில், ஆதிக்க வெறியேறி நிற்கும் அமெரிக்கா ஆர்ப்பாட்டம் செய்கிறது. முதலாளித்துவத்தை எதிர்த்தொழித்து விட்ட ரோஷக்கார ரஷ்யாவும் போரிடுகிறது.

தினம், தினம்—புதுப் புதுப் போர்ச் செய்திகள் வந்து குவிகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணதுரை



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 19—9—71 | இதழ் 10

புரட்சிகர கல்வித் திட்டம்!

"துவக்கப் பள்ளி முதல், பல்கலைக்கழகப் படிப்பு வரையில், கல்வி முறையில் புரட்சிகரமான மாறுதல் தேவை"

—என்று கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை, விவேகானந்தா கல்லூரியின் வெள்ளி விழாவின்போது சிறப்புரையாற்றி இருக்கிறார்.

தமிழகக் கல்வி அமைச்சர் அவர்கள், கல்வியின் தரம்பற்றியும், அது மாற்றப்பட வேண்டியதன் அவசியம்பற்றியும் அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்திருப்பதுபோலவே, இப்போதும் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

கடந்த ஐம்பதாண்டுக் காலமாக, கல்வியின் எல்லா மட்டத்திலும் ஒரேமாதிரியான பாடப்புத்தகங்களே பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதாகவும், இந்தக் குறை களையப்பட்டு, புரட்சிகரமான முறையில் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் எடுத்துக் காட்டி பேசி இருக்கிறார்கள்.

நாட்டின் பொதுக் கல்வியின் தரம்பற்றி, எல்லா தரப்பிலுமே அதிருப்தி நிலவிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை கல்வி அமைச்சர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதையே இந்தக் கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

கல்வித்தரம் என்பதற்கு, ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான விளக்கங்கள் கொடுத்து, தத்தமது மனவேட்கைகளை வெளிப்படுத்திக் காட்டப் பயன்பட்ட—பயன்படும் சந்தர்ப்பங்களும் ஏராளம் உண்டு.

இந்தக் கல்வித்தரம்—என்பதனை, அரசியலோடு பிணைத்து ஆர்ப்பரிப்பவர்களும் நாட்டில் இருந்துகொண்டுதானிருக்கிறார்கள்.

யார், யார் எந்தெந்த வேட்கைகளை வெளிப்படுத்தி எப்படி எப்படியெல்லாம் விமர்சித்தாலும் கூட, பொதுவில் கல்வியின் தரம் என்பது, கற்கும் மாணவ மணிகளது பொது அறிவை வளர்த்துவிட்டு, தானகவே எந்தவொன்றைப் பற்றியும் சிந்தித்து முடிவெடுத்துச் செயல்படக்கூடியவகையில் உருவாக்கத்தக்கதாக இருக்கவேண்டும் என்பதுவே மிகப் பெரும்பாலான—எதிலுமே பட்டுக்கொள்ளாத பலருடைய விருப்பமாக இருந்து கொண்டிருக்கிறது.

இன்று, பொதுவாக, கல்வித்தரம் என்பதற்கு, உயர்மட்டக் கல்வியின் தரத்தை மட்டுமே பெரும்பாலோர் எடுத்துக்காட்டிப் பேசுகின்றனர். உயர்மட்டக் கல்வியின் அடிப்படையாகவிருக்கும் கீழ்மட்டக் கல்வியின்மீது, மிகுதியும் அக்கறை காட்டினுல், அந்த அக்கறையின் அடிப்படையில், கல்வி கற்றுவரும் மாணவர்கள் மேல்மட்டத்துக்கு வரும்போது, தரமுடைய கல்வியினைக் கற்று, மேலும் அந்தத் தரத்தை வளர்த்துக்கொள்ள நல்ல வாய்ப்பினைப் பெற முடியும்.

கீழ்மட்டக் கல்வியின் நிலை, இன்றைக்கு இயங்கிக்கொண்டிருக்கும் தன்மையினை ஆராய்ந்து பார்த்தால், பாடத்திட்டத்தின் காரணமாகவே மாணவர்கள் எதையும் செரிமானம் செய்துகொள்ள முடியாமல் போய்—எதுவுமே தெரியாத—புரியாத தன்மையில் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

கல்வியில் முன்னேற்றம்—என்ற கணக்குக்காக, எப்படியாவது மாணவர்கள் தேர்வுறச் செய்யப்பட்டு, மேல் வகுப்புக்களுக்கு மாற்றப்பட்டுக் கொண்டே வந்துவிடுகிறார்கள்.

தேர்வு முறைகளிலும் குறைபாடு இருந்துகொண்டிருக்கிறதென்ற குற்றச்சாட்டும் சிலகாலமாகவே உயிர்ப்பெற்றுக்கொண்டு வருகிறது.

துவக்கப்பள்ளிகள் முதல் கல்லூரிகள் வரையில் இந்த தொடர்ச்சங்கிலி நிலை தோன்றிக்கொண்டே வந்து, மாணவர்களைக் கெடுப்பதுடன், தரத்தையும் கெடுத்துவிடுகிறது.

எனவே, கல்வித்தரம் புரட்சிகரமான முறையில் மாற்றம் செய்யப்படவேண்டும் என்று நாவலர் அவர்கள் கூறும்போது, உளமகிழ்வுடன் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளனர் அறிவாளர்கள்.

கீழ்மட்டக் கல்வியின் பாடத்திட்டத்தை மறு ஆய்வுசெய்து, சுமையின் அளவையும் குறைப்பதுடன், வகுப்புக்களில் மாணவர்களது எண்ணிக்கையையும் குறைக்கத்தக்கவகையில் அமைச்சர் அவர்களது சிந்தனை செல்லுமானுல், அது பயனுடையதாக அமையக்கூடும்.

இதே வேளையில், கல்வி அமைச்சர் அவர்கள் "கல்வியில் மாறுதல்" என்பதன் பேரால் "காலத்தில் மாறுதல்" செய்வதுபற்றியும் அடிக்கடிப் பேசி வந்திருக்கிறார்கள்.

வாழ்க்கை முறையில் எவ்வளவோ, மாறுதல்கள் அடைந்துவிட்ட இந்தக்காலத்தில், கல்வி அமைச்சர் அவர்கள் கருதுகிறபடி நேரம் மாறுதல் வெற்றி பெறத்தக்கதாக அமையும் என்று எதிர்பார்க்க இயலாது. இதுபற்றியும் தக்கவகையில் சிந்தனை செலுத்தி, "நேரமாற்றம்" என்பதனையும், ஒரு வினுக் குறியாகவே விட்டுவைக்காமல், திட்டவட்டமான அறிவிப்பை வெளியிட்டு, ஆசிரியர், மாணவர் ஆகியோரது கலக்கத்தைப் போக்க முன்வர வேண்டும்.

நட்சத்திரம் உதிர்ந்தது!

இரஷ்யாவின் முன்னாள் பிரதமர் குருச்சாவ், மாரடைப்பினுல் இந்தக் கிழமை 11-ம் நாள் மரணமடைந்துவிட்டார் என்ற செய்தியை, இரஷ்ய அரசு வட்டாரம் அறிவித்திருக்கிறது.

குருச்சாவின் வாழ்க்கை முறை. ஒருவர் அரசியலில் எவ்வளவு உயரத்துக்கு வேண்டுமானுலும் போகலாம்; எவ்வளவு கீழேயும் தூக்கி எறியப்படலாம் என்பதற்கு உன்னதமான ஒரு உதாரணமாகும்.

இரஷ்ய அரசியலில், கம்யூனிசக் கொள்கைச் சித்தாந்தத்தில் ஸ்டாலினேடு, உயர் அளவில் இருந்து வந்த குருச்சாவ், உலகுக்கே ஒரு பேரதிர்ச்சியாக

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு நலத்தில் நாட்டமுள்ள நல்லவர்கள் நடுங்குகிறார்கள் செய்திகளைப் படித்துவிட்டு—காற்றடிக்கும் பொழுதே தூற்றிக் கொள்ளடா என்ற போக்கினர் பொறியைத் தீயாக்கவும், தீயை ஜுவாலையுடன் எரியச் செய்யவும் துடிக்கின்றனர்.

கொரியா 'போலந்து' ஆகிவிடுமோ என்று கேட்கிறது உலகம்—இல்லை என்பாரும் உளர். அப்படி ஆகும்படி விடக்கூடாது என்று பேசுவோரும் இல்லாமல் போகவில்லை. எனினும் யுத்தபீதி ஆரம்பமாகிவிட்டது. போர் என்ற பரபரப்புணர்ச்சி பரவிடத் தொடங்கிவிட்டது.

இந்தியா—போர் நிறுத்த வேலையில் ஈடுபடுமாம்.

பண்டிதநேரு அனுப்பியிருக்கிறார் இரண்டு கடிதங்கள்—விடை கிடக்கட்டும். அதன் விளைவைக்கூடப் பிறகுபார்ப்போம், அந்த இரண்டு கடிதங்கள் போரை நிறுத்தப் புறப்பட்டுப் போயிருக்கின்றன.

ஆம், யுத்தம்—ஒரு பயங்கரத் தொடர்கதை!

மூன்றும் உலக யுத்தம் தலைநீட்டிவிட்டது. இன்று ஏடுகளைப் புரட்டுவோம்—பழைய போர்க்கதையைப் படித்தால் உடனே கூவுவோம், போர் கூடாது, யுத்தம் வேண்டாம் என்று.

யுத்தம் உலகத்தின் இயற்கை விதி என்று வாதிட்டோர், வாதிடுவோர் உண்டு — போரிடு புகழடைவாய். கருணையென்று சொல்லிப் பேடியாகாதே. செத்த அமைதி என்றுபேசி அடிமுட்டாள் என்று பட்டம் பெறாதே. செத்த அமைதி சீரழிவைத்தான் தரும் என்று உபதேசம் புரிந்தவருமுண்டு.

அமைதி என்று அடித்துக் கொள்கிறாய். அது கிட்டாப் பொருளடா, கேள்—சண்டையிடு—சமாதானம் அடை என்று தூபமிடுவோர் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு ஒரு நல்ல பாடம் --யுத்தத்தின் பயங்கரத் தொடர்ச்சித்திரம். அவர்கள் அதனைப் புரிந்து கொண்டால் பிறகு யுத்தம் என்ற சத்தங் கேட்டாலே, அடங்கி விடுவர்.

ஒவ்வொரு நாட்டு வரலாற்று ஏட்டையும் பிரியுங்கள், படியுங்கள். யுத்தத் தொகுப்புக் குறிப்பொன்று எழுதிவிடலாம். அவைகள் ஏன் ஏற்பட்டன என்ற காரணப் பட்டியலையும் தயார் செய்துவிடலாம்.

ஃ ஃ ஃ

அரசு செலுத்த, நாடேற்படுத்த யுத்தம் தேவை என்றார்கள் — வளர்ந்த அரசுகளிலே உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்படும்--ஏற்பட்டுத் தான்தீரும். இங்கிலாந்து தேசத்து நார்மன் படையெடுப்பு, டேனர் நுழைவு என்று சாட்சிகள் தேடினர். ரோஜாப்பூப் போர், குடியானவர் கலகம், குருதியற்ற புரட்சி என்று பல நிகழ்ச்சிகளை இழுத்து வந்து நிறுத்தினர். மதத்தை நிலைநாட்ட மக்கள் மார் தட்டி, தோள் தட்டி, தொடை தட்டிக் கிளம்பியிருக்கின்றனர் போருக்கு. ஐரோப்பிய வரலாற்றுச் சிலுவைப் போர்களைத் தொகுத்தாலே போதும்என்றனர். உரிமைக்காக, அந்நிய ஏகாதிபத்தியங்களை எதிர்த்த வீரச் சம்பவங்கள் ஏராளம் உண்டு வரலாற்றில். பிரஞ்சுப் புரட்சியை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். அலெக்சாந்தரை எதிர்த்த போரஸ், அக்பரோடு பொருத பிரதாப்சிங் ஔரங்க சீபைப் சிதறடித்த சிவாஜி—நினைத்துப் பாருங்கள் ஒரு கணம்—அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் மறக்கக்கூடிய சம்பவமா? தனித்தவர்களின் வீரத்தையும், வெற்றியையும் உலகறியச் செய்யக்கூடப் போரிட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. அலெக்சாந்தரை அணுகுங்கள். செங்கிஸ்கானை நெருங்குங்கள். ஹானிபாலை மறக்காதீர்கள், நெப்போலியனை நினைவுகூருங்கள். இட்லரைத் தள்ளிவிடாதீர்கள்.

வணிக உரிமைகளைப் பெறப் போரிட்டதாக ஆயிரம் உண்மைகள் காட்டலாம், இந்திய வரலாற்றின் பிற் பகுதியில்! போர்த்துகீசியர், டச்சுக் காரர், பிரஞ்சு மக்கள், ஆங்கிலேயர் ஆகியோர் போட்ட போட்டா போட்டிச் சண்டைகள் எத்தனையோ...... எண்ணி முடியக் கூடியதல்ல!

இப்படி யுத்தம் ஏற்பட அடுக்கடுக்கான காரணங்களைக் காட்டி நிற்பர் போர் வெறியர்கள். பழங்கால நிகழ்ச்சிகளைக் கோவைப் படுத்திப் பார்த்தால் போர் வேண்டும் என்ற முடிவிற்கு நேர்மையாளர், நீதி வேண்டுவோர் வர முடியாது.

யுத்தம் — பயங்கரமான பதம்! அகராதியே நடுங்கிடும் சொல் அது! அதற்கு இப்படிக் காரணங்கள் காட்டுகின்றனர்.

ஃ ஃ ஃ

யுத்தம் செய்தே தான் நாடு பிடிக்க வேண்டுமா? இல்லாவிட்டால் முடியாதா? திராவிடரை ஆரியர் விரட்டினர். ஆரியரை அடுத்து அடுக்கடுக்காகப் படை வீரர்களின் பரம்பரை வந்தபடியே இருந்தன. பாக்டிரியர், சாக்கியர், ஹூணர், அராபியர், மங்கோலியர், போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என்று புற்றீசல்கள் போல வந்து வந்து நம் வாழ்வினை அழித்தனர். அவர்கள் ஆட்சியைப் பிடித்தனர்.

வந்தவர் வஞ்சகர், வாழ்வினில் செழித்தனர். வசழ்ந்தவர், நல்லவர், அழிந்தே போயினர்.

போருக்கான காரணங்களைக் கூறும்பொழுது சில சமயங்களில் சிரிப்பும் வரும் — சீற்றமும் ஏற்படும். ஏன்? சூதாட்டத்தினால் நாடுகளைத் தோற்பதாம்—பிறகு அவைகளை மீட்கப் போராட்டமாம்! நமது இதிகாசம்—பாரதம் பேசுகிறது—வெட்கக்கேடு! இழந்த

(13-ஆம் பக்கம் பார்க்க)

மட்டுமல்லாமல் இரும்புத் திரையிடப்பட்ட நாடாகவும் இருந்த இரஷ்யாவை வெளிப்படுத்திக் காட்டியவர். அதேபோல் பூதாகாரமான ஸ்டாலின் தோற்றத்தையே சாமான்யமானதாக்கி, அந்த சின்னங்களையே அழித்துவிட்டவரும் குருச்சாவ்தான்!

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் வானில் மிக அதிகமான அளவுக்குச் சுடர்விட்டுக் கொண்டிருந்த அவர், திடீரென ஒருநாள் பதவியிலிருந்து தூக்கியெறியப்படவும் செய்தார். அதன்பிறகு, அவருக்குத் தரப்பட்ட முக்கியத்துவங்கள் குறைந்து, அந்தப் பெயரையே அகிலம் மறந்துவிடத்தக்க நிலையும் உருவாகி இருந்தது.

குருசாவின் மறைவு குறித்து நமது கலைஞர் அவர்கள், "நட்சத்திரம் ஒன்று உதிர்ந்துவிட்டது" என்று சரியாகவே குறிப்பிட்டுள்ளார்கள். அனைத்துமே எடுத்துக் காட்டாக இலங்கிக்கொண்டிருந்த ஒரு நட்சத்திரம் உதிர்ந்துதான் விட்டது.

★

சோழமாதேவி

ராஜிமணாளன்

[26]

திருவாரூரார் திருவடி சேர்ந்தார்?

மாலை மங்குவதற்குச் சற்று முன்னதாக, அரண்மனைக்கு வந்து சேர்ந்த எள்ளாளச் சோழப் பேரரசரையும், சோழமாதேவியையும், அரண்மனை வாயில் முகப்பிலேயே வரவேற்ற முதலமைச்சர் முத்து முடியார், மன்னர் தேவியாரை, தன்மீது சாய்த்துக் கொண்ட நிலையில் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு வருவதைப் பார்த்துத் துணுக்குற்றுப் போனார்.

“தேவியாருக்கு என்ன பிரபு?” என்று கேட்டுக் கொண்டே அருகில் நெருங்கினார். “மருத்துவருக்கு ஆள் அனுப்பட்டுமா?” என்று கேட்டார்.

“நானே சொல்லியனுப்பி விட்டேன் அமைச்சரே!” என்று சொல்லிய மன்னர், தன் பார்வையை, அந்தக் கூடத்தின் நாலா பக்கமும் பாய்ச்சுவதைக் கண்ட முதலமைச்சர், அதன் குறிப்பறிந்து, அங்கே வாயிலில் நின்று கொண்டிருந்த ஒரு சேவகனை அழைத்து, ஒரு இருக்கை எடுத்துப் போடும்படிப் பணித்தார். பணியாள், சிறிதுத் தூரத்திலிருந்த இருக்கையொன்றை எடுத்துக்கொண்டு வந்துபோட்டதும், மன்னர் தேவியை அதில் அமரச் செய்தார். இன்னொரு இருக்கையும் கொண்டுவந்து போடப் பட்டது. மன்னரும் அமர்ந்து கொண்டார். வேறிரு பணியாட்கள், மயில் விசிறி கொண்டு இருவருக்கும் விசிறத் தொடங்கினர். அதற்குள் அரண்மனையே பரபரப்படைந்து விட்டது. தேவியாருக்கு ஏதோ ஆபத்து என்ற குசுகுசுப்பு அரண்மனை முழுவதையும் விரைவாக ஆக்கிரமித்துக் கொண்டது. துணிவு மிக்க சிலர், அரசர் வீற்றிருந்த கூடத்தில் வந்து எட்டி நின்றனர். பலர், தூரத்திலிருந்தபடியே தலையை மட்டும் நீட்டி நீட்டி அங்கே என்ன நடக்கிறது என்பதைக் காண முயன்றனர்.

சிறிது நேரத்தில், தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட மன்னர், அங்கே கூடியிருந்தவர்கள் அனைவரையும் அவ்விடம் விட்டுப் போகுமாறு பணித்து விட்டு, முதலமைச்சரிடம் “அமைச்சரே! அப்படியொன்றும் பெரிய விபரீதம் ஏற்பட்டு விடவில்லை. சிறிய வேலொன்று தேவியின் மேன் முதுகில் தைத்து விட்டது. இரண்டு காயங்கள்தான்! சிறிய காயம் தான்!” என்று கூறினார்.

குகை முகப்பில் மூர்ச்சையாகி இருந்த தேவியார், குதிரையின்மீது சவாரி செய்து வந்ததால், மூர்ச்சை தெளிந்து நல்ல நிலையிலேயே இருந்தார். நிகழ்வுகளை உணர்ந்துகொள்ளும் தெளிவு அவருக்கு ஏற்பட்டிருந்தது. தேவியார், “ஆமாம் அமைச்சரே! சிறிய காயங்கள்தான்! ஆனால் வலியைத்தான் தாள முடியவில்லை” என்று கூறிவிட்டு மன்னரின் முகத்தை ஒரு விநாடி வரையில் கூர்ந்து கவனித்துவிட்டு, ‘இதற்கே இவ்வளவு வலி இருக்கிறதே; போர்க்களத்தில், வாட்களாலும், வேல்களாலும் தாக்குண்டு போவோரின் நிலை எப்படி இருக்கும்?” என்று கேட்டுவிட்டு, வலி தாங்காததால், உடலை மெள்ள நெளித்துக் கொடுத்தார்.

தேவியின் பேச்சைக் கேட்டு மன்னர் சிரித்துக் கொண்டார். முதலமைச்சருக்கு பதில் சொல்ல வேண்டும்போல இருந்தது. அதற்குள் அங்கே மருத்துவர் வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் மன்னர், நாம் அந்தப்புரத்துக்கே போய்விடலாமே என்றார் தேவியைப் பார்த்து.

“நானும் அதைத்தான் நினைத்தேன் பிரபு!” என்று தேவியார் சொல்லிக்கொண்டே இருக்கையிலிருந்து எழ முயன்றார். ஆனால் கால்கள் நொடித்துக் கீழே சாயத் தொடங்கினார். அதனைக் கவனித்துவிட்ட மன்னர், தேவியைச் சட்டென்று தாங்கிப் பிடித்துக்கொண்டே எழுந்து, தேவியைத் தன்மீது சாய்த்துக் கொண்டார்.

அந்தக் காட்சி, முதலமைச்சருக்கும், மருத்துவருக்கும்கூட என்னவோபோல இருந்தது. கண்களாலேயே, தேவியாருக்கு என்ன என்பதுபோல அமைச்சரைப் பார்த்தார் மருத்துவர். அதற்குள் மன்னர், தேவியாரை கைத்தாங்கலாகப் பிடித்து அழைத்துக் கொண்டு, அந்தப்புரம் நோக்கி நடக்கத் தொடங்கினார்.

சில நிமிடங்களில், அந்தப்புரத்தை அடைந்ததும், மருத்துவர், மஞ்சத்தில் படுக்க வைக்கப்பட்ட தேவியாரைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, “காயம் சிறியதுதான் அரசே! ஆனால் அதிகமான இரத்தம் சிந்திவிட்டிருக்கிறது. பயப்படத் தேவை இல்லை” என்றார்.

ஏதோ சிலவகை மருந்துகளைக் காயத்துக்குப் போட்டு, கட்டு கட்டிவிட்டு, வெளியில் வந்தார் மருத்துவர். அவரைத் தொடர்ந்து மன்னரும், முதலமைச்சரும், வெளிப்பக்கக் கூடத்துக்கு வந்ததும், மன்னரே விளக்கம் தந்தார் மருத்துவருக்கு.

“தம்பளை குகைக் கோவிலில், தேவியின்மீது சிறிய வேலொன்று பட்டுவிட்டது. அவ்வளவுதான்” என்றார் மன்னர். அவர் மன்னராக இல்லாவிட்டால், “எதிலும், எங்கும் கொஞ்சம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்” என்று பதில் சொல்லி இருப்பார் மருத்துவர். ஆனால், “காலையில் வந்து மறுபடியும் பார்க்கிறேன் அரசே!” என்று கூறி மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட சில மாத்திரைகளை மன்னரிடம்

கொடுத்துவிட்டு, இரவு உணவு உட்கொள்ளுமுன்பு இதனைக் கொடுத்துவிடுங்கள்; சாப்பிட்ட பின், தேவியார் அவர்கள் அயர்ந்து உறங்குவார்கள், வருகிறேன் அரசே!" என்று கூறி விடைபெற்றார்.

மருத்துவர் சென்ற பிறகு, குகைக் கோயிலில் தாங்கள் கண்ட சிறப்புக்களைப் பற்றி யெல்லாம் அழகாக எடுத்துக் கூறிக்கொண்டே வந்தார் மன்னர். கேடயங்கள் குவிக்கப்பட்டிருந்த உட்குகையின் முகப்பு வாயிலில், தங்களை உள்ளே போகக்கூடாது என்று காவலர்கள் தடுத்தது வரையில் சொல்லி நிறுத்தினார் மன்னர்.

வியப்போடு அவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த முத்துமுடியாருக்கு, மேலே நடந்தது என்ன என்பதை அறியும் ஆவல் மிகுதியாகி விட்டது.

அதற்குள் சேவகன் ஒருவன், மன்னரிடம் வந்து நின்று வணங்கி, ஒற்றன் வேல் ரெத்தினம் மன்னரைச் சந்திக்கக் காத்திருப்பதாகக் கூறினான். "வரச் சொல்!" என்று கூறி அவனை அனுப்பிவிட்டு, முதலமைச்சரைப் பார்த்து திகைப்பூட்டக்கூடிய புதிய செய்தியொன்றை நீங்கள் இப்போது தெரிந்து கொள்ளப்போகிறீர்கள் என்று கூறினார். குகையிலிருந்து கைது செய்து அழைத்துக்கொண்டு வந்த இரு காவலர்களையும் பிணைத்துக் கட்டி இழுத்துக் கொண்டுவந்து மன்னர் முன்பு நிறுத்திவிட்டு, பணிவோடு நின்றான் வேல் ரெத்தினம்.

மன்னர், அவர்கள் இருவரையும் சுட்டிக்காட்டி "அந்தக் காவலர்கள் இவர்கள்தான் அமைச்சரே!" என்று கூறிவிட்டு, காவலர்கள் மீதே பார்வையை நிறுத்திக்கொண்டு, அமைச்சரிடம், "அமைச்சரே, அதற்கான காரணம் என்ன என்பதை இவர்களிடம் நீங்களே விசாரணை செய்யுங்கள்!" என்றார்.

ஏறக்குறைய அந்தக் காவலர்கள் இருவரும் தங்கள் சுயநிலையை இழந்துவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். எனவே, எத்தனையோ கேள்விகள் கேட்டும், அவர்களிடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. அவர்கள், தாங்கள் தடுத்தது மன்னரைத்தான் என்றும், தாக்கியதும் அவரைத்தான் என்றும் அறிந்த பிறகும், அவர்களது உயிரின் பிரிவுக்குக் கவலைப்படாமலிருப்பார்களா என்ன?

முதலமைச்சருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. "இந்த நாய்களை இழுத்துச் சென்று இருட்டறையில் பூட்டுங்கள், உண்மைகளைக் கூறும் வரையில் உணவு கொடுக்காதிர்கள்; இழுத்துப் போங்கள்" என்று கட்டளையிட்டார். மன்னருக்கு அமைச்சரின் கட்டளை சற்றே மனவருத்தத்தைக் கொடுத்தாலும் களைகள் களையப்படுவதிலே கண்டிப்புத் தேவைதான் என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டார்.

வேல் ரத்தினம், கைதிகள் இருவரையும் இழுந்துக் கொண்டு வெளியேறியதும், மன்னர் "அமைச்சரே! அந்தக் குகைக்குள்ளே கேடயங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன, போர் வாட்கள் மலை மலையாக சேமிக்கப்பட்டிருக்கின்றன. இவைதவிர, இன்னும் என்னென்னவோ இருக்கலாம் என்றும் யூகிக்கிறேன்" என்று கூறினார். கேடயங்கள், வாள்கள், வேல்கள் என்று மன்னர் கூறியதைக்கேட்டு விழி விரிந்த நிலையில் முத்துமுடியார் "அப்படியா அரசே! அவைகள் அங்கே எப்படி வந்தன? என்றார்.

அதற்குள் அரசியாரும் மஞ்சத்தைவிட்டு எழுந்து மெள்ள நடந்து அறையைவிட்டு வெளியேறி கூடத்திற்குவந்து மன்னருக்கு அருகே அமர்ந்து கொண்டார்.

"அந்தப் போர்க் கருவிகள் அனுராதபுரத்துக்குச் சொந்தமானவை அல்ல அமைச்சரே! என்றார். குறுக்கிட்ட தேவி "எந்தக் கருவிகள் பிரபு?" எனக் கேட்டார். "தொடக்கத்திலிருந்து மறுபடியும் எல்லாவற்றையும் சொல்ல வேண்டுமா தேவி" எனக் கேட்டுவிட்டு, அவரை "வேண்டாம்! குகைக் கோவிலில் உன்னைத் தாக்குவதற்காக வென்றே சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றனவே, போர்க் கருவிகள், அவைகள் நமக்குச் சொந்தமானவை அல்ல" என்றார்.

அரசர் அதனைச் சொல்லி முடித்ததும், எல்லாமே தேவியாருக்குப் புரிந்துவிட்டது. அப்படிப்பட்ட ஆயுதங்களில் ஒன்றின்மீதுதான் தான் தடுமாறி விழுந்திருக்க வேண்டும் என்பதும், அங்குதான் ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளன வென்பதும் புரிந்து விட்டது தேவியாருக்கு. மேற்கொண்டு நடந்ததை அறிய அவரும் அவா கொண்டார்.

"அந்தப் போர்க் கருவிகள் அனைத்தும், ரோகணரடாவுக்குச் சொந்தம் என்று இப்போது அனுமானிக்க முடிகிறது. அங்கே அவைகள் எப்படிக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன என்பதை நீங்களே கண்டுபிடியுங்கள்" என்றார் மன்னர்.

"புரிகிறது அரசே! போர் ஏற்படும்போது, நம்மைத் தாக்கத் தேவையான ஆயுதங்களை, இங்கேயே சேமித்து வைத்திருக்கிறார்கள். சேமித்து

வைக்க, குகைக் காவலர்கள் ஒத்துழைத்திருக்கிறார்கள். அவைகள் அங்கே இருப்பதனை அறியக்கூடாது என்பதற்காகவே, நீங்கள் தடுக்கப்பட்டிருக்கிறீர்கள்; ஒருவேளை நீங்கள்தான் மன்னர் என்பது காவலர்களுக்குத் தெரிந்திருந்தால், முன்னதாகவே, அவர்கள் தப்பியோடிவிட முயற்சித்திருக்கக் கூடும்'' என்றார் முத்துமுடியார்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன் அமைச்சரே!'' என்று கூறியவர், தேவியாரைப் பார்த்து, "வலி அதிகமாக இருக்கிறதா தேவி!'' என்றார்.

"கொஞ்சம் பரவாயில்லை பிரபு'' என்று கூறியவர், விழிகள் வியப்பால் விரிய, "பிரபு, அதோ பாருங்கள், வேட்டரையன் வருகிறான்'' என்றார்.

தூரத்தில், ரோகணரடாவுக்குத் தேவியாரால் தூது அனுப்பப்பட்ட வேட்டரையன் வந்துகொண்டிருந்தான்.

தாங்கள் குகைக்குச் செல்லும் முன்பு, அவனைப் பற்றி மன்னரே கேட்டதும், மற்ற விவரங்களை அவரே சொல்வதாகக் கூறியதும் நினைவுக்கு வந்தன.

"நல்ல வேளையாய்ப் போயிற்று தேவி! இன்று அவனைப் பற்றிய விவரங்களை எப்படியும் உனக்குத் தெரிவித்துவிட வேண்டும் என்றிருந்தேன்; மறந்தே போய்விட்டது, குகையிலே ஏற்பட்ட புதிய அனுபவங்களால்! தேவி, அவன் வந்து சொல்லப்போகும் செய்திகள் மூலம், அவனைப் பற்றி நீ புரிந்துகொண்டு விடலாம்.'' என்று கூறிவிட்டு, வேட்டரையன் வரும் திசையில் பார்வையைத் திருப்பினார்.

அங்கே அமர்ந்திருந்த முதலமைச்சர் முத்துமுடியாருக்கு அரசரது அந்தப் பேச்சு பற்றி எதுவும் புரியவில்லை. ஆனால், மன்னரின் முழுநம்பிக்கைக்குரிய ஒரு அந்தரங்கப் பணியாளாக இதுவரையில் அவன் இருந்தான் என்பதும், சில நாட்களுக்கு முன்பு, அவனை மன்னர் ரோகணாவுக்கு அனுப்பி இருப்பதாக அவரே தெரிவித்ததும் நினைவுக்கு வரவே, அந்தச் சந்தர்ப்பத்தில் தான் அங்கே இருப்பதில் யாருக்கும் தடையிருக்க நியாயமில்லை என்று தனக்குள் முடிவு செய்து கொண்டாலும், அந்த முடிவுக்கு மன்னரின் ஒப்புதல் வெளிப்படையாகவே கிடைக்கவேண்டும் என்று நினைத்து, மன்னரைப் பார்த்து "அதோ வேட்டரையன் வந்துவிட்டான் அரசே! நான் போய்விட்டு பிறகு வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே எழ முயற்சித்தார்.

மன்னர், முத்துமுடியாரைத் தடுத்து, அமரச் செய்து, "வேட்டரையன், அனுராதபுரத்து ஆட்சியின் பொதுவிவகாரம் பற்றிய செய்திகளுடன்தான் வருகிறான் அமைச்சரே! அவன் அறிவிக்கப் போவன பற்றித் தாங்களும் தெரிந்துகொள்வது நல்லது தானே!'' என்று கூறினார்,

"நெடுநாட்களாக அவனைக் காணவில்லையே பிரபு! தமிழ்நாடு சென்று வருகிறானா என்ன?'' என்று கேட்டு முடிப்பதற்குள், அங்கே வந்து சேர்ந்துவிட்ட வேட்டரையன், முதலில் தேவியாரின் பக்கம் பார்வையைப் பதித்து "வணங்குகிறேன் தேவி!'' என்று கூறிவிட்டு, மற்ற இருவருக்கும் அப்படியே வணக்கம் செலுத்திவிட்டு, மன்னருக்கு எதிரே ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றான்.

எதிரே நின்றவனை மன்னர், ஒரு விநாடி வரையில் கண்ணோட்டம் விட்டுவிட்டு, "வேட்டரையா, நீ இப்போது எங்கிருந்து வருகிறாய்?'' என்றார்.

மன்னரது வினாவால் அதிர்ச்சியடைந்த அவன், பதறிப்போய், "நீங்கள் அனுப்பிவைத்த இடத்திலிருந்துதான் அரசே நேராக வருகிறேன்!'' என்றான்.

"தேவி சொல்கிறார், நீ தமிழ் நாட்டுக்குப் போய் வருவதாக. அதனால்தான் எனக்கே சந்தேகம் வந்துவிட்டது'' என்று மெள்ள சிரித்துக்கொண்டே தேவியாரை ஏறிட்டுப் பார்த்தார் மன்னர்.

"நான் அப்படிச் சொல்லவில்லையே பிரபு! நெடுநாட்களாகக் காணவில்லையே என்றுதான் அதுபோல் கேட்டேன்'' என்று மன்னருக்குப் பதில் தந்துவிட்டு வேட்டரையனைப் பார்த்து "நீ இதுவரையில் நம்பிக்கைக்குரிய ஒருவனாகத்தானே இங்கே இருந்தாய்? இப்போது...'' என்று முடிப்பதற்குள் முதலமைச்சர் குறுக்கிட்டு, "இப்போது நம்பிக்கைத் துரோகம் ஏதாவது செய்துவிட்டானா தேவி?'' என்று வியப்போடு கேட்டார். வேட்டரையன் பதிலேதும் சொல்லாமல், பொங்கிவந்த சிரிப்பை மிகச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டான். அப்போது மன்னர் "ஆமாம் அமைச்சரே! தேவி தியாகவல்லிக்கு, வேட்டரையன் துரோகம்தான் செய்துவிட்டான். தியாகவல்லியின் ஆத்திரத்திற்குப் பொருள் இருக்கிறது'' என்று கூறிவிட்டு, "அது பற்றிப் பிறகு பேசுவோம்!'' என்று சொல்லி வேட்டரையனைப் பார்த்து "செய்திகள் ஏதாவது இருக்கிறதா?'' என்றார்.

"நிறைய இருக்கிறது அரசே! நம்முடைய நாட்டுக்குள்ளேயே, நந்திமித்திரன், போர்க் கருவிகளைச் சேகரித்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. இடம்தான் சரியாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை...'' என்று இழுத்தான். அதற்குள் மன்னர், முத்து முடியார் ஏதாவது குறுக்கே பேசிவிடுவாரோ என்ற எண்ணத்தில் "அப்படியா! அதுபற்றி நம் ஒற்றுத் துறை கவனித்துக் கொள்ளும்'' என்று கூறிவிட்டு "அப்புறம்?'' என்ற வினாவுடன் நிறுத்தினார்.

"போர்க் கருவிகள், நம் தெற்கெல்லைக் கோட்டைப் பகுதியிலே தயாரிக்கப் படுகின்றனவாம்.''

"என்ன! விஜிதபுரக் கோட்டைப் பகுதியிலா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டார்முதலமைச்சர். மன்னர் சற்று முன் கூறிய தகவல்களுக்கும் இதற்கும் உள்ள நெருங்கிய தொடர்புபற்றி மனதுக்குள் எண்ணிக் கொண்டார். விஜிதபுரத்திலிருந்து அருகே தம்பளை இருப்பதால், அந்தக் குகையை, அதனாலேயே பயன்படுத்திக்கொண்டிருக்கிறான் என்று மன்னரும், சோழ தேவி தியாகவல்லியும் தம் மனதுக்குள்ளேயே திடப்படுத்திக்கொண்டனர். குகைக்குள் சேகரிக்கப்பட்டிருக்கும் போர்க் கருவிகள் ரோகணரடாவுக்குச் சொந்தமானவை என்பது முன்பே தெரிந்ததுதான் என்றாலும், அதன் சூத்திரதாரி யார் என்பது இப்போது துலக்கமாகியது.

"இதைவிட, சுவையான ஆனால் திடுக்கிடத்தக்க இன்னொரு செய்தி இருக்கிறது அரசே!'' என்று கூறினான்.

"முட்டாளே! அதையல்லவா முதலில் சொல்லி இருக்கவேண்டும்! போர் தொடங்குவதற்கான நாள் குறிக்கப்பட்டுவிட்டதா என்ன?'' என்று கேட்டார் சோழ தேவியார். அவன் ரோகண நாட்டிலிருந்து

தான் வருகிறுன் என்பதையும், அங்கே ஒற்றுப் பணியில் ஈடுபட்டிருக்கிறுன் என்பதையும் அதற்குள் புரிந்துகொண்டிருந்தார். அவன் கூறும் தகவல்கள் மூலம். தேவியின் வினு, மன்னருக்குச் சிரிப்பை மூட்டியது என்ருலும், அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "செய்திகளின் முக்கியத்துவத்தை வரையறுத்துக்கொண்டு இடவரிசை கொடுக்க வேண்டும் என்பது, பல இடங்களுக்குத் தூதுவனுகச் சென்றுவந்த உனக்குத் தெரியவில்லையா என்ன?" என்று கேட்டார்.

"தெரியும் அரசே! நான் முதலில் தெரிவித்த தகவல்தான் முக்கியத்துவமுடையது. இப்போது தெரிவிக்கப்போவது திடுக்கிடத்தக்கது மட்டும்தான். அனுராதபுரத்துக்கு எதிராக, ரோகணுவில் இப்போது இருக்கும் படைபலம் போதாதென்றும், இன்னும் புதிதாக எவ்வளவு வீரர்களை இராணுவத்துக்குச் சேர்த்துக்கொண்டாலும், எவ்வளவு கருவிகளைத் தயாரித்துக்கொண்டாலும், அவை, நம் படைபலம் முன்பு மிகச் சிறியதேயாகும் என்று மன்னர் காகவனதீசர், மனப்பூர்வமாக நம்புகிருராம்! அதனுல், ஜம்புத்வீபத்தில் இப்போது போர் செய்து கொண்டிருக்கும் கிரேக்கன் யாரோ ஒருவனிடம், படை உதவி கேட்கப்போவதாகவும், உதவி கேட்க, நந்திமித்திரனையும், கமணனையும் ஜம்புத்வீபத்துக்கு அனுப்பிவிட்டதாகவும் தெரிகிறது" என்ருன்.

வேட்டரையன் சொல்லச் சொல்ல இருக்கையில் நிமிர்ந்து அமர்ந்துகொண்ட மன்னர், முதலமைச்சரைப் பார்த்து "அமைச்சரே! நாவலந்திவின் வடமேற்கு எல்லையிலிருக்கும் ஆப்கனிஸ்தானத்தில் இப்போது முகாமிட்டிருக்கும் கிரேக்கன் அலெக்சாண்டரிடம் படை கேட்கப் போகிருராமே, காகவனதீசர், கேட்டீர்களா அமைச்சரே!" என்று கூறிவிட்டு, வேட்டரையனைப் பார்த்து "வேட்டரையா, நீ கூறியது திடுக்கிடத்தக்க செய்தியல்ல! நகைத்துக் களிக்கத்தக்க செய்தி!" என்று கூறிவிட்டு, சோழ தேவியின் பக்கம் திரும்பி, "தேவி, அந்த அலெக்சாண்டர், தெக்கணத்தின் வட எல்லைப் பகுதிக்கு இப்பாலுள்ள புருஷோத்தமன் என்ற மாவீரன் ஒருவனைத் தோற்கடித்துவிட்டாலும், மீண்டும் அவனிடமே நாட்டை ஒப்படைத்துவிட்டு, இப்போது திரும்பிவிட்டான் என்று நமக்குத் தகவல் வந்ததே நினைவிருக்கிறதா?" என்று கேட்டார்.

"இருக்கிறது பிரபு! போர் வீரர்கள், இனியும் தங்களால் போர்புரிய முடியாது என்று மறுத்துவிட்டதனுலேயே அவன் திரும்பினுன் என்றல்லவா நமக்குத் தகவல் வந்தது?"

"தகவல் அப்படித்தான் தேவி! ஆனுல் என் யூகம் என்ன தெரியுமா? அந்தக் கிரேக்கன் திரும்பிவிட்டதற்குப் படை வீரர்களது எதிர்ப்புத்தான் காரணம் என்பதை என்னுல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. புருடோத்தமனது வீரம்தான் காரணம் என்கிறேன் நான். அவன் தனது பெல்லா நகரை விட்டுப் புறப்பட்டு, சிந்து சமவெளியை அடைந்த அந்த எட்டாண்டுக்காலத்தில், எந்த எதிர்ப்பையுமே சந்திக்கவில்லையாம்! வேங்கை வருகிறது என்று முன்னதாகத் தகவல் தரப்பட்டதும், நாட்டு மக்கள் எச்சரிக்கையாக பாதுகாப்புடன் இருப்பதுபோல், கொலைகாரன் வருகிறுன்; கொள்ளைக்காரன் வருகிறுன் என்று பரப்பப்பட்ட தகவல்களே, இந்திய வீரர்களையெல்லாம்கூட கிலிகொள்ளச் செய்து எத்தகைய எதிர்ப்பும் காட்டாமல், பணிந்துவிடச் செய்திருக்கிறது. அத்தகைய நிலையில் அவன் ஒரு வெறியனுகவே இருந்திருக்கிறுன். தட்டிக்கேட்க ஆளில்லை என்ற தருக்கில் மிதக்கத் தொடங்கி இருக்கிறுன். என்ருலும் எத்தனையோ முறை, அவனது போர் வீரர்கள் நாடு திரும்பவேண்டும் என்று முறையிட்டும், வீரர்களை அச்சுறுத்தி, பணியச் செய்து போருக்குத் தீனி கொடுத்துக்கொண்டிருந்தவன், ஒருநாள், போர் வேண்டாம், திரும்பிவிடுவோம் என்று ஒப்புக்கொண்டு விட்டானும்! எவ்வளவு பெரிய கேலிக்கூத்து இது" என்று கேட்டு, அமைச்சர் இருந்த பக்கம் முகத்தைத் திருப்பி, "அமைச்சரே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? புருடோத்தமனது வீரம்தான், அவனை நிலைகுலையச் செய்திருக்கிறது என்கிறேன் நான். நீங்கள்?" என்ற வினுவைப் போட்டு நிறுத்தினுர் மன்னர்.

அதுதான் உண்மை என்பதே என் முடிவும் அரசே! புருடோத்தமன் தோற்கடிக்கப்பட்டதுகூட அவன் தன்னையொத்த இன்னொரு கயவனுல் காட்டிக் கொடுக்கப் பட்டதுதான் என்று தெரிய வந்திருக்கும் போது, வேறெப்படி கருத முடியும்? சிந்துவெளியைத் தாண்டுவதற்கு அலெக்சாண்டர் பயந்து விட்டான் என்று கூறுவது தவருகாதுதான். தெக்காணத்தைப் பற்றி அவன் அறிவிக்கப் பெற்றிருக்கக் கூடும்! "என்ருர் முத்துமுடியார்

"அப்படித்தானிருக்க வேண்டும், தன் அச்சத்தை வெளிக்காட்டிக் கொள்ள நாணித்தான் அந்த பழியை வீரர்களின்மீது போட்டுவிட்டு, இப்போது திரும்பி விட்டான்! அலெச்சாண்டர் இப்போது ஆப்கனிஸ்தானத்தில் முகாமிட்டு இருப்பதாகத் தானே தகவல்?"

"ஆம் அரசே!" என்று முத்துமுடியாரால் கூறக் கேட்ட மன்னர், வேட்டரையனைப் பார்த்து "வேட்டரையா! நந்திமித்திரனும், கமணனும் புறப்பட்டு விட்டார்களா? அவர்களை மன்னர் காகவனதீசரே அனுப்பினுர் என்பதும் நம்பத்தக்கதுதானு?" என்று கேட்டார்.

"ஆமாம் அரசே! அரசி விகாரதேவியார் அவர்கள், முதலமைச்சர் காசியபரிடம் இப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அத்துடன் அரசே, இதுவரையில் நமக்கு ஆதரவாக இருந்த மன்னர், அனுராதபுரத்தின்மீது படை எடுக்க, ரோகணுவுக்கு ஊக்கம் தரத் தொடங்கி இருப்பதாகவும் அந்த அரசியார் பேசிக் கொண்டிருந்தார்கள்."

"இந்தத் தகவல் கிடைத்தபின், நீ அவர்கள் இருவரையும் சந்திக்கவே இல்லையா?"

"இல்லை அரசே! இரண்டு நாட்கள் வரையில் தங்கி இருந்துவிட்டு, அப்புறம் சிற்றிளவரசர் சென்று இருக்கும் தீகவாபிக்குப்போய் இரு நாட்கள் இருந்துவிட்டு, அங்கிருந்து காட்டுப்பாதையில் விஜிதபுரம் வந்து ஏதாவது தகவல் கிடைக்குமா என்பதற்கு முயன்றுவிட்டு, இப்போது, நான் அங்கிருந்து தான் அரசே வருகிறேன்! தொடக்கத்தில் நீங்கள்

எங்கிருந்து வருகிருய் என்றதும், அதனுலேயே சற்றுப் பதட்டம் ஏற்பட்டுவிட்டது" என்ருன் வேட்டரையன்.

"ஆக, மகாகாமாவைவிட்டு அவர்கள் புறப்பட்டு விட்டார்கள் என்பது உறுதியாகிவிட்டதில்லையா? சரி, சிற்றிளவரசன் தீசனின் நிலை எப்படி இருக்கிறது?"

"தீகவாபியிலே தங்கி இருந்துகொண்டு, தேர்ப் படைப் பிரிவொன்றுக்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிருர். தண்டோரா மூலம், காலாட்படை வீரர்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள்."

"நல்லது! வேறு ஏதேனும் செய்திகள் உண்டா?"

"மன்னர் காகவனதீசரைப்பற்றி எனக்குச் சந்தேகமாக இருக்கிறது அரசே!"

"இருக்கட்டும்; கண்காணிப்பை மிகுதிப்படுத்திக் கொள்; எச்சரிக்கையுடன் இரு" என்று கூறி தேவியைப் பார்த்து "தேவி, வேட்டரையனிடம் நீ ஏதாவது கேட்கவேண்டியிருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஒன்றும் தேவையில்லை பிரபு! தேவைப்படும் போது தங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன்" என்று கூறிவிட்டு, எழுந்து மீண்டும் படுக்கையறைக்குச் சென்ருர்.

அவர் சென்றதும், "நீ போகலாம்!" என்று வேட்டரையனை அனுப்பிவிட்டு, அவன் போனதும், "அமைச்சரே! போருக்கான ஆயத்தங்கள், நம் பக்கத்தில் எந்த அளவுக்கு இருக்கின்றன?" என்ருர்.

"தேவைப்படும்போது, இதுபற்றி நீங்க தே அறிவிப்பதாகத் தெரிவித்தீர்கள்..." என்று முடிக் முடியாமல் தடுமாறினுர் அமைச்சர்.

"ஓ! நான் அதை மறந்தே போனேன்! தளப தியாகராயரிடம் சொல்லுங்கள், படைக்கலப் பெரு கத்துக்கு உத்திரவிடும்படி! புதிய வீரர்களின் சேவைக்கு ஆணை அனுப்பச் சொல்லுங்கள்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார்.

வழக்கம்போன்ற சிந்தனைக்கு ஒரு விளுடி ஒது கிக்கொண்டு, 'அமைச்சரே, தம்பளை குகையில் இரு கும் போர்க் கருவிகள்பற்றிய தகவல்களைத் தியா ராயருக்குத் தந்து, அவற்றை அங்கிருந்து அகற்றி நமது பாடிமனைக்குக் கொண்டுவரக் கூறுங்கள் விஜிதபுரம்—வீரபாகுவை உடனே இங்கு வரும்ப ஓலை அனுப்புங்கள்!! என்று உத்திரவுகளை அடுக் விட்டு, சோழ தேவியார் தியாகவல்லி சென்ற அதே அறைக்குள் போக, நடக்கத் தொடங்கினுர். அமைச் ரும் பின்னுேக்கி நடக்க ஆரம்பித்தார்.

அப்போது, அங்கு பணியாள் ஒருவன், மன்ன ரிடம் வேகமாக வந்து நின்று வணங்கி "தமிழ் நாட்டிலிருந்து, மன்னரைச் சந்திக்க கவிஞர் ஒருவர் வந்திருப்பதாகச் சொல்லி, வந்தவர், ஆரூர் ஐயன் மனுச்சோழர் மாண்டுவிட்டதாகக் கூறுவதாகவும் சொல் நின்ருன்.

வண்ணமிகு படைப்புகள், வர்ணமய உலகம்.
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம். பட்டுகள் பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும். குர்தாக்கள், பெல் பாட்டம்கள்,
லுங்கிகள், சேலைகள்! உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்!!

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்.

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ்,
எழும்பூர், :: சென்னை - 8.

எழுத்தாளர் இல்லம்

இடம் : எழுத்தாளர் வீடு.

ஸ்வரன்: [வெளியே இருந்துவரும் ஈஸ்வரன், தன் மனைவியைப் பெயர் கூறி அழைத்தவாறு உள்ளே நுழைதல்] சுலோசனா... சுலோசனா! உள்ளே என்ன செய்துகிட்டு இருக்கே?

லோசனா : [உள்ளே இருந்து கொண்டே] அடுப்படியிலே அரசாட்சி செய்துகொண்டு இருக்கேன்...

ஸ் : ஆகாகா ... இப்போதான்டி நீ எழுத்தாளன் ஈஸ்வரன் மனைவி; அடுப்பங் கரையை ராஜ்யமாக்கிவிட்டு, நீ ராணியாகிவிட்டே... நல்ல கற்பனை...

லோ : கிண்டல் பண்றீங்களா? சோக எழுத்தாளர்னுதான் இதுவரைப் பேர் வாங்கனீங்க; இனிமே நகைச்சுவை எழுத்தாளர்னு பட்டம் வாங்கத் திட்டமா? சுட்டுப் போட்டாலும் உங்களுக்கு நகைச்சுவைதான் வராதே. பேசாம உங்க சோகத்திலேயே நீங்க போங்க...

ஸ் : நல்லா சொன்னே சுலோ... சோகம் என் எழுத்திலேயா இருக்கு? உம்...!! என் வாழ்க்கையிலேதான் இருக்கு...! என்ன பண்றது? கல்யாணத்துக்கு முன்னாலே நகைச் சுவையாதான் எழுதினேன்...

லோ : இந்தத் துணுக்கே எங்கேயோ படிச்சமாதிரி இருக்கே. பெண்டாட்டி கிட்டேயாவது சொந்தக் கற்பனையிலே பேசக் கூடாதா?

ஸ் : கதவைக் கொஞ்சம் மூடுடி; எவன் காதிலேயாவது விழப்போவுது. அப்புறம்'காப்பி' எழுத்தாளன்னு சொல்லப் போறான். அதான்டி...'காப்பி'... நான் சொல்றது காதிலே விழுதாடி 'காப்பி' எழுத்தாளன்னு ...இன்னுமா புரியலே...

லோ : நல்லா புரியுது; 'காப்பி' வேணும்னு வெளிப்படையாதான் கேளுங்களேன். இருங்க... போயி கலந்துகொண்டு வரேன்; அதுக்குள்ளே நீங்களும் உங்கக் கற்பனையோட கலந்துடாதீங்க!

[உள்ளே போதல்]

ஈஸ் : சுலோ... சுலோ...

சுலோ : [அங்கேயே சற்று தூரத்தில் நின்று] அய்யோ போதுமே கொஞ்சல் சுலோவாம் சுலோ...

ஈஸ் : இவ ஒருத்தி; ஏன்டி கொஞ்சற மாதிரியா நீ இருக்கே. இவ்வளவுவேகமாபோறியே, கொஞ்சம் 'சுலோ'வா போன்னு சொன்னேன்.

[ஈஸ்வரனின் மகள் சிறுமி பார்வதி வருதல்]

புலவர் அரிமதி தென்னகன்

பார்வதி : அப்...பா...! நீ எப்பப்பா வந்தே.

ஈஸ் : அதுசரி...இவ்வளவு நேரமா நீ எங்கே போயிருந்தே.

பார் : தெருவிலே விளையாடிகிட்டு இருந்தேம்பா; அப்பா...! எனக்குக் கீழேஇருந்து நாலணா கெடச்சுதுப்பா...

ஈஸ் : (ஆச்சரியத்தோடு) நாலணாவா...! அதிர்ஷ்டகாரியாச்சே நீ. நாப்பதோ ஐம்பதோ கிடைச்சிருக்கக் கூடாது. சரி...சரி..., எங்கம்மா அந்தக் காசு; கொண்டா...நாளைக்கு உனக்கு மிட்டாய் வாங்கித் தரேன். கதை எழுதக் காகிதம் வாங்கக் காசில்லையேன்னு நினைச்சேன்;

பார் : நீங்க என்னப்பா...மிச்சத்தையும் கேக்காம.........! கீழே கெடந்தநாலணாவை நான் எடுத்தேனா......கேளுங்க; எடுத்தேனா, எடுத்தேன்...

நகைச்சுவை நாடகம்

ஈஸ் : கீரல் விழுந்த பிளேட்டாட்டமா எடுத்தேனா, எடுத்தேன்; எடுத்தேனா, எடுத்தேன், மேலே சொல்லு.

பார் : பக்கத்து வீட்டு 'வெங்கு' இல்லேப்பா வெங்கு, அவன், 'பார்வதி பார்வதி; கீழே இருந்த காச எடுத்தா பூமா தேவிக்குக் கோவம் வரும். கீழே போட்டுடு; இல்லேன்னா பாவம்னு சொன்னாம்பா. சரின்னு அங்கேயே போட்டுட்டேம்பா. ஏம்பா...! பூமாதேவி காச எடுத்தா பாவந்தானே.

ஈஸ் : மூடம்... மூடம்... சரியான மூடம்! பாவமாம் பாவம்! நீ என் பொண்ணுன்னு பொறந்தேப் பாரு அதுதான் பாவம்...! அதோ பாரு; அந்த 'வெங்கு' பையன் பஞ்சு மிட்டாய் வாங்கித் திங்கறான். நீயும் இருக்கியே ......

பார் : வவ்வவ்வே...நான் அம்மா கிட்டே போறேன். (போதல்)

ஈஸ் : போ...போ... அம்மா ஒரு அசடு; மக ஒரு மக்கு...

[சுலோசனா வருதல்]

சுலோ : அம்மா ஒரு அசடுன்னு இப்பத்தான் தெரியுதா? மக ஒரு மக்காம்...! உங்க மகன் மட்டும் ரொம்ப சமத்தோ...?

[மகன் ராமு வருதல்]

ராமு: சரியான நேரத்திலேதான் வரேன். அப்பா...! என்னப்பா இன்னைக்கு விசேஷம்; மைசூர் பாக்கு ... காரா பூந்தி...அம்மா! ஏதும்மா...

சுலோ: வாடா அப்பா சமத்து: வந்ததும் வராததுமா விசாரணையா?

ஈஸ்: அவன்மேலே ஏண்டி எரிஞ்சி விழறே. குடிக்கக் கூழில்லே; கொப்பளிக்கப் பன்னீர்ன்னு சொல்வாங்கலே, அதுபோல நாலு நாளா வெத்து ரசமும், வெங்காயச் சட்டினியும்; திடீர்ன்னு டிபனும் கையுமா வந்து நின்னா......!

சுலோ: இது ஒன்னும் திடீர்ன்னும் வரலே; திருடிக்கிட்டும் வரலே; எல்லாம்......

ராமு: அப்பாவுக்குத் தெரியாம சேத்து வச்ச காசா? இன்னிக்கு

எனக்குப் பொறந்த நாளுகூட இல்லையே...

சுலோ: அது ஒன்னுதான் கொறைச்சல்...எல்லாம் அப்பா சேர்த்து வச்ச சொத்திலேதான் நாலு பொட்லம் காராபூந்தியும், ரெண்டு மைசூர் பாக்கும் வாங்கினேன்......

ஈஸ்: அம்மா சஸ்பென்ஸ் ராணி...! சீக்கிரமா விஷயத்துக்கு வா......

பார்வதி: அம்மம்மா...... சஸ்பென்ஸ்னு என்னம்மா

ராமு: பெரிய எழுத்தாளர் மக; இதுகூடத் தெரியலே......

ஈஸ்: ஏய் சுலோ...கொஞ்சம் சீக்கிரமா சொல்லு ... இதெல்லாம் ஏது?

சுலோ: உ..ங்......அந்த ஓட்டைப் பெட்டி நிறை வச்சிருந்திங்க பாரு சொத்து... அந்தக் குப்பையெல்லாம் தூக்கிப் போட்டேன். லாலாதடை சேட்டுக்கடையிலே, எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு இதெக் குடுத்தான்,

பார்: நான்தாம்பா வாங்கியாந்தேன்;

ராமு: (திகிலோடு) அப்பா...... அப்பா...! அப்பா மயக்கம் போட்டு விழுந்திட்டாரும்மா... போம்மா...போயி கொஞ்சம் தண்ணி கொண்டாம்மா...

ஈஸ்: போடி...போ... தண்ணியை எம் முகத்திலே தெளிக்காதே, கரண்டி கரண்டியா வாயிலே ஊத்து; பத்து வருஷமா நான் எழுதி வச்சதெல்லாம் ரெண்டு பொட்டலம் காராபூந்தியாக் கிட்டியே. அட்சரம் லட்சம் பெறும்படி; என்னைக்காவது ஒருநாள் புஸ்தகமா போடலாம்; ஆயிரமாயிரமா விக்கும்; சினிமாக் காரங்க தேடிகிட்டு வருவாங்கன்னு திட்டம் போட்டேனே, எல்லாத்தையும் மைசூர் பாக்காட்டமா வாயிலேபோட்டுகிட்டியே.

ராமு: அடடா...! அப்போவாவது அப்பா எனக்கு ஒரு ஸ்கூட்டர் வாங்கித் தந்திருப்பாரே...

பார்: போம்மா நீ; இப்படி தெரிஞ்சிருந்தா நான் எடுத்துகிட்டே போயிருக்கமாட்டேன். பட்டுப் பாவாடையும் சொக்காயும் போட்டுகிட்டு கார்லே போயிருப்பேன்; உம்...எல்லாம் காராபூந்தியாப் போச்சு.

சுலோ: அப்பா சோகக் கதை எழுதுவாரு; புள்ளைங்க ரெண்டு பேரும் மாயாஜாலக் கதை எழுதுறீங்களா. ஸ்கூட்டர்லேயும், கார்லேயும் போறப்போ போங்க... இப்போ... இந்தாங்க ஆளுக்குக் கொஞ்சம் இதெ தின்னுங்க.

பார்: அம்மா......! மைசூர் பாகு ரொம்ப நல்லா இருக்கு......

ராமு: சாதாரண காகிதத்தைப் போட்டு வாங்கினதா என்ன! கதைங்களைப் போட்டு வாங்கினதாச்சே...சுவையான கதைங்க போல இருக்கு... அதனால்தான் காராபூந்தியும் தித்திக்குது.

ஈஸ்: தித்திக்குன்டா தித்திக்கும்; எத்தனைப் போட்டிக்கு எழுதின கதைங்க; எம்மாம் பெரிய பத்திரிக்கைங்க திருப்பி யனுப்பின துங்க. எல்லாமே இப்படிக் காராபூந்தியா போச்சு. உம்...என்ன பண்றது; எங்கடாஇது...எனக்கு வச்ச பங்கு?

சுலோ: அது இன்னுமா இருக்கும்? என்னமோ பிள்ளைசாவு கொடுத்தவளாட்டம் புலம்பிகிட்டு இருந்தா...வச்சது வச்சபடியா இருக்கும்...? வாயிலே எடுத்துப் போட்டுகிச்சுங்க......

பார்: நான்தாம்பா உம் பங்கை எடுத்துக்கிட்டேன்.

ராமு: நானு காராபூந்தியை மட்டுந்தாம்மா எடுத்துகிட்டேன்.

ஈஸ்: அம்மா சுலோச்...சனு; அடுப்பிலே இருக்கிற காப்பியாவது எனக்குக் கிடைக்கட்டும்; நீயே போட்டுக் கொண்டார்றியா? இல்லே.........நானே போட்டுக் குடிக்கட்டுமா?

சுலோ: நானே சொல்லலாம்னு தான் வந்தேன்; நல்லவேளை; நீங்களே நினைவு மூட்டனீங்க. பச்சை விறகு; அடிப்பு சரியா எரியமாட்டேங்குது. கொஞ்சம் பத்தவச்சு பிள்ளைங்களுக்குக் கொடுங்க. எனக்கும் எடுத்துவச்சிட்டு, நீங்க கொஞ்சம் குடிங்க.

ஈஸ்: ஏண்டி சுலோச்......சனு, நீ என்னதான் நினைச்சுக்கிட்டிருக்க! அடுப்பை மூட்றது நான்; காப்பி போட்றது நான்; உனக்கு எடுத்து வச்சிட்டு, நான் கொஞ்சமாக் குடிக்கணுமா?

ராமு: அம்மா சொல்றதும் ச தாம்பா; நீங்க எத்தனைக் கதை யிலே எழுதியிருக்கீங்க...'கா போட்டு எடுத்துகிட்டு கணவ தூங்குற மனைவியை எழுப் ஞன்னு...

ஈஸ்: அது கற்பனையா எழுதி துடா...; அதுக்குத் தண்டனை இது......

பார்: (கொஞ்சலாக) அப்பப்ப அம்மா போட்ட காப்பிடே தினம் குடிச்சி குடிச்சி எ னமோ மாதிரியா இருக்குப்ப இனிமே தினம் நீதாம்பா 'காட போடணும்......

சுலோ: குழந்தையே ஆசைப்படு போங்க...எனக்காக இல்லாட டிப் போனாலும் நம்ப பாரு காகவாவது போடுங்க...

ஈஸ்: ஏம்மா அடுப்படி ராணி.... எப்படியாவது என்னை அடுப்ப ராஜாவாக்கவா இப்படித் து யாத் துடிக்கிறே?

ராமு: அம்மாவுடைய அந்த ஆ யைத்தான் ஏம்பா கெடுக் ணும்? நகைநட்டா கேக்கறுங் இல்லே......பட்டுப் புடவையுப் பனாரசமுமா கேக்கறுங்க.

பார்: அப்பப்பா......எனக்கு ஒ பட்டுப் பாவாடைவேணும்பா..

சுலோ: ஏங்க.........! பத்திரிகை லிருந்து ஏதாவது பணம் வ ணுமா?

ஈஸ்: நேத்துதான் ஒரு கதை அனுப்பி இருக்கேன்......வந்த லும் வரும்...அதுக்கு என்ன?

சுலோ: இல்லே......பனாரஸ் சேலை ஒண்ணு...

ஈஸ்: வாயைத் திறந்திட்டே இல்லே...இனிமே பணமாவரும் அனுப்பினகதை திரும்பித்தான் வரும்...

பார்: அப்பப்பா...இப்போதுதான் நினைவு வருது...உங்களுக்கு ஒ 'கவர்' வந்ததுப்பா......இதே எடுத்து வரேன்.

ஈஸ்: ஏம்மா பாரு! 'கவரு' தடியா இருந்துதா? இல்லே சின்னதா இருந்ததா? ஒட்டி இருந்ததா ஒட்டாம இருந்ததா?

பார்: சின்னதாதாம்பா இருந்தது இதோ எடுத்து வர்ரேன்...

ஈஸ்: போட்டிக்குக் கதை அனு பினேனே; அதனுடைய முடிவா தான் இருக்கும்; வெற்றிபெற் வருக்குத்தான் கடிதம் எழுத வாங்க...

ராமு: ஏம்பா! முதல் பரிசு எவ்வளவு...

ஈஸ்: மூவாயிரம் ரூபாடா; இரண்டாம் பரிசு இரண்டாயிரம்; மூன்றும் பரிசு ஆயிரம்...

சுலோ: ஏங்க! ஆறுதல் பரிசு எவ்வளவுங்க... நூறு ரூபாக் கூடவா இருக்காது...

ஈஸ்: அடசட்! வாயை மூடு; சுத்த அபசகுனமாட்டம் .... 'ஏய் பாரு இன்னும் என்ன செல்யறே; சீக்கிரம் எடுத்தா...

பார்: (உள் இருந்து கொண்டு) இங்கேதாம்பா வச்சேன், எங்கேயோ காணோம்...

ராமு: ஏய் பாரு......இப்ப உன்னே என்ன செய்றேன் பாரு; பொறுப்பா தேடிப் பாரு......... சனியன்...! அதிர்ஷ்டத்தை இப்படியா தொலேச்சிட்டுத் தேடுவாங்க...

[பார்வதி கடிதத்தோடு வருதல்

பார்: அப்பா, 'கவர்' மேல் 'கதை வானம்பேர்' போட்டிருக்குப்பா.

ராமு: கதை வானம் பெரிய பத்திரிகையாச்சே... சீக்கிரம் பிரிச்சுப் பாருங்கப்பா.

சுலோ: டேய் ராமு...! நீயே படிச்சுப்பாரு; அதிலே இருக்கிறத படிச்சுட்டு அப்பாவுக்கு மயக்கம் வந்தாலும் வரும்

ராமு: அதுவும் சரிதான்; கொண்டாங்கப்பா 'கவரை' அப்பா...! 'லெட்டர்பேட்லே' எழுதியிருக்காங்கப்பா...

ஈஸ்: விஷயத்தைப் படிடா...

சுலோ: ஏண்டா பேசாம இருக்கே ...டேய் ராமு! ஆடு திருடின திருடனுட்டம் ஏன் திருதிருன்னு விழுக்கிறே.

பார்: என்னண்ணு நீ; சீக்கிரம் சொல்லு...

ஈஸ்: டேய் ராமு...மூன்றும் பரிசா இருந்தாலும் பரவாயில்லேடா ...என்னதான் எழுதியிருக்கான்.

ராமு: அ...ப்...பா...

சுலோ; ஆறுதல் பரிசுன்னு எழுதியிருக்கானு...?

ராமு; ஆமாம்மா...இப்போ நமக்குத் தேவையே ஆறுதல் பரிசு தான். படிக்கிறேன் கேளும்மா...

(ராமு கடிதத்தைப் படித்தல்)

அன்புடையீர், வணக்கம்

சுலோ: மரியாதையிலே ஒன்னும் குறைச்சலில்லே......

ராமு: கொஞ்சம் சும்மா இரும்மா. (கடிதத்தைப் படித்தல்)

'கதை வானம்' ஏற்பாடு செய்த போட்டிக்குத் தாங்கள் அனுப்பிய உறையில், கதை ஒன்றும் இல்லே. 'இப்படியா ஏமாறுவது?' என்ற தலைப்பில் ஒரு கவிதைதான் இருந்தது. கவிதை நன்முக இருந்தது......

சுலோ; என்னங்க இது......இங்கிருந்து கதையை அனுப்பினு அது கவிதையா அங்குப் போவுது. இது என்ன, அற்புதமாயில்லே இருக்கு.

ஈஸ்: ஏய் சுலோ! கொஞ்ச நேரம் சும்மா இரு; ஒரே கொழப்பமா இருக்குது...;! கதை எப்படி கவிதையாச்சு...? கதை போயி கவிதை வந்துதா? இல்லே... கதையே கவிதையா மாறிப் போச்சா?

சுலோ: ஏங்கஉங்களேத்தானே! 'இப்படியாஏமாறுவது'ங்குற கவிதை தலைப்பு நல்லாயிருக்குங்க, இதுக் தகுந்த மாதிரி ஒரு கதை எழுதுங்களேன்.

ராமு. கவிதையும் ரொம்ப நல்லா இருந்துதாம் ...... இருக்காதா பின்னே...பிரபல எழுத்தாளர் ஈஸ்வரனின் ஒரே மகன் எழுதிய கவிதையாச்சே; எப்படி நல்லாயில்லாமப் போகும்?

ஈஸ்: அடே பிரகலாதா! உன்னுடைய கவிதையா இது? என் கதை என்னடா ஆச்சு......

ராமு: என்ன ஆகியிருக்கும்? என் கவிதை கதை வானத்திற்குப் போனுப் போல, உங்க கதை 'கவிநிலா'வுக்குப் போயி இருக்கும்......

சுலோ: 'தபால்லே' போடுடான்னு போயும் போயும் அவன் கிட்டே சொன்னீங்களே......

ராமு: நான் என்னம்மா செய்வேன். கைத்தவறுதலா மாத்திப் போட்டுட்டேன். நல்ல வேளே ஸ்டாம்பு வச்சியிருக்கேன்...நிச்சயமா திரும்பி வரும்.

பார்: அப்போ ...... ரெண்டையும் போட்டா லாலா கடையிலே ஓம பொட்டலம் காராபூந்தி கொடுப்பான்.......இல்லே யாண்ணே.

ஈஸ்: ஏய் பாரு ... எரியிற நெருப்பிலே எண்ணெய ஊத்தாதே வயிறு பத்தி எரியுது......

ராமு: வயித்துத் தீயை, அணைக்க 'காப்பி' கூட இல்லே...

பார்: அப்பப்பா...'காப்பி'போடுங்கப்பா......

சுலோ: மணி ஏழாகப் போவுது... 'காப்பி'யாம் காப்பி......அடுப்ப மூட்டி சமையலாவது செய்றேன்

ஈஸ்: அதையாவது செய்...எல்லாம் என் கெட்டகாலம்...

சுலோ:- டேய் ராமு: ஈர விறகு; பத்தவைக்க முடியல்லே; ஏதாச்சும் எழுதின காகிதம் இருந்தா கொடேன்...

ராமு:- வேண்டாம்மா வேண்டாம் ...அப்பா காகிதத்தைத் தின்னே பழக்கப்பட்ட அடுப்புக்கு என் காகிதம்ன்னு பிடிக்காது. நான் வர்ரேன்...

சுலோ:- போடா போ...சாப்பாட்டு நேரத்திற்குச் சரியா வந்துடு. ஏய் பாரு...தெருக் குழாயிலே கொஞ்சம் தண்ணிப் பிடிச்சா... உலே வைக்கனும்...

பார்:- சரிம்மா...

சுலோ:- என்னங்க...அங்கே என்ன செய்றிங்க. இங்கே கொஞ்ச வாங்களேன்...

ஈஸ்;- கொஞ்ச வாங்களேன்...... கொஞ்ச வாங்களேன்னு ஏண்டி இப்படி உயிரை எடுக்கறே? ஒரு 'அய்டியா' இப்பதான் வந்தது; எழுதலாம்னு உட்கார்ந்தேன்...

சுலோ:- வந்த 'அய்டியா'வுக்கே வருமானத்தை ஒன்னும் காணோம்; எழுதப் போருராம் எழுத...

பார்;- இந்தாம்மா கொழாத் தண்ணி...எங்க வைக்க...

சுலோ:- என் தலையிலே வையி... கேள்வி கேக்கு கேள்வி...இப்படித்தான் வையி.

பார்:- அம்மா...பசிக்குதும்மா...

சுலோ:- என்கிட்டே சொல்லி என்ன புண்யம்; கதை எழுதருரே உங்கப்பா, அவருகிட்டே சொல்லு...

பார்;- அப்பப்பா... பசிக்குதப்பா... அம்மாகிட்டேசொன்னு, அம்மா உங்கிட்டே சொல்லச் சொல்ருங்க...

ஈஸ்:- எங்கிட்டே சொல்லச் சொல்லலம்மா அவ, என்னேக் கொல்லச் சொல்ரு...இனிமே நான் எழுதினுப்போலதான்...

சுலோ;- எழுதுங்க......எழுதுங்க; இன்னிக்கு சோறு ராத்திரி பத்து மணிக்குத்தான்...

ஈஸ்: இப்ப என்னே என்னடி பண்ணச் சொல்றே...

சுலோ: அப்படி வாங்க வழிக்கு... இந்தாங்க, இந்த வெங்காறத்தையும், வெள்ளைப் பூண்டையும் உரிச்சிக்கொடுங்க...இதோ ஒரு, நொடியிலே சோறாக்கிடறேன்.

ஈஸ்: நான் ஒரு எழுத்தாளன்டி...

சுலோ: அதெல்லாம் வீட்டுக்கு வெளியே...ஊருக்கு எழுதுங்க! வீட்டுக்கு இந்த வெங்காயத்தை உரிங்க! ஏண்டி பாரு...... என்ன பண்றே? புஸ்தகத்தை வச்சு கிட்டுப் படியேன்.

பார்: ......சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளேல்
கூறுமல் சந்நியாசங்கொள்...

ஈஸ்: பாத்தியா சுலோ, உன் மக, அவனுக்காகப் படிக்கலே: இப்போப் படிச்சாளே பாட்டு, அது எனக்காகப் பாடினு...

சுலோ: நீ வேகமாபடிச்சதுபோதும் மனசுக்குள்ளேயே படி. அப்பப்பா...இதுங்களோடே கத்திக் கத்தி தொண்டையே வரண்டு போச்சு...

ஈஸ்: உனக்குத் தொண்டைதான் வரண்டு போச்சு...எனக்கு மண்டையே வரண்டுபோச்சு...

சுலோ: தாகமா இருக்கு தண்ணி மொள்ளுங்கன்னு, கேலியா பண்றீங்க? கொஞ்சம் தண்ணி மொள்ளுங்க...........இந்தாங்க டம்ளரு......

ஈஸ்: மொள்றேன்...மொள்றேன் ....எத்தனையோ ரசிகருங்களுடைய இதயதாகத்தைத்தீர்த்தவன்... இந்தா...குடி...குடி... (கொஞ்சலாக) சுலோசனு...! ஒரு அருமையான 'பிளாட்'......

சுலோ: பணம் இருந்தா வாங்கிப் போடுங்களேன். நானு வேணுங்கறேன்.........வாடகை வீட்லே 'இருந்து இருந்து'......

ஈஸ்: போதும்...போதும்... நான் என் கற்பனையிலே உதிச்ச கதையோட 'பிளாட்'டைச் சொன்னு ......ஏய் சுலோ! அருமையான பிளாட்; சினிமாக்காரன் கேட்டான்னு, அப்படியே கொத்திக்குவான்...சொல்றேன் கேளேன். எனக்கும் சொன்னமாதிரி இருக்கும்; உனக்கும் தோலே ... வெள்ளைப் பூண்டுத் தோலே—உரிச்ச மாதிரியும் இருக்கும்.

சுலோ: கதையும் வேணும், ஒண்ணும் வேணும்...

ஈஸ்: 'ஏ-ஒன்-பிளாட்' சுலோ...

சுலோ: அந்த எவர்சில்வர் பிளேட்டைக் கொஞ்சம் எடுங்களேன்; அப்படியே அந்த உப்பு ஜாடியைக் கொஞ்சம் எடுங்க......... கொஞ்சமா உப்பை எடுத்து, இப்படிக் கொடுங்க. புளியைக் கரைச்ச கையோட எடுக்கக் கூடாதேன்னுதான் கையிலே கொடுங்கன்னு சொன்னேன்...

ஈஸ்: இன்னும் ஒன்னுதான் பாக்கி......அடுப்ப ஊதச் சொல்லலே...

சுலோ: பாத்திங்கள்ளா......பாத்திங்களா நல்லவேளை ... ஏங்க...... ஏங்க.........கொஞ்சம் விறகைத் தள்ளிவிடுங்க......நீங்க ஒன்னும் அடுப்ப ஊதவேணும்......தள்ளி விட்டா போதும்.........டூப்போ பாத்திங்களா......அடுப்பு எவ்வளவு நல்லா எரியுது!! (பரபரப்போடு) ஏங்க உங்க கண் கலங்குது; உங்கக் கதையை கேக்கலேன்னு...இல்லே அடுப்பு விறகைத் தள்ளச் சொன்னேன்னு...

ஈஸ்: ஏன்டி! என்னை அழுகச்சொல்றியா நீ; வெள்ளைப்பூண்ட உரிக்கிறவரை ஆம்பளையா இருந்தேன். வெங்காயத்தை உரிக்க ஆரம்பிச்சவுடனே பொம்பளையா மாறிட்டேன்... இப்போ புரியுதா? நீ என்னுடி கதையைக் கேட்கறது......இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்...... வங்காளத்திலிருந்து ஆள் வருவான் என் கதையைக் கேட்க.

[ராமு வருதல்]

ராமு: வங்காளத்துக்காரன் வருவானே என்னமோ, நிச்சயமா நாளைக்கு வட்டிக் கடைக்காரன் வரேன்னு சொன்னான்.

பார்: அண்ணனும் வந்துட்டுது; சோறு போடம்மா.

சுலோ: பாத்திங்களா ...... உங்க மகன் சோத்துவேளைக்குச் சரியா வந்துட்டான். சும்மா சொல்லக் கூடாது...அப்பா மகன்தான்டா நீ.

ராமு: அம்மா அம்மா......அப்பாவுக்கு ஒரு 'குட்நியூஸ்'.

பார்: என்னண்ணு......எங்கிட்டே சொல்லேன்.

ராமு: அம்மா......கொஞ்ச நேரத்துக்கு முன்னலே 'லாலா கடை' பக்கம் போனேன். அந்த 'சேட்டு' என்னைக் கூப்டாரு. தங்கச்சிப் போட்டுட்டு வந்த எல்லாக் காகிதத்தையும் திருப்பிக்கொடுத்து, ரொம்பப் பழைய காகிதம்...... பொட்டலங்கட்டமுடியலேன்னு சொல்லி, வாங்கிட்டுப் போன துக்குக் காசை நாளைக்கு வந்து குடுத்துடுப்பான்னு சொன்னரு. எல்லாத்தையும் 'டேபிள்' மேல வச்சிருக்கேன்.

ஈஸ்: அப்பாடி...ரொம்ப நல்லதா போச்சு, டேய் ராமு! நாளைக்குக் காசுக்கு என்னடா பண்றது...?

ராமு: ஏம்பா......புதுசா திரும்பி வந்த கதைங்க ஏதாவது இருக்கா?

பார்: அப்பப்பா...பசி வயித்தைக் கிள்ளுது; கொழம்பு வாசனை மூக்கை இழுக்குது...வாங்கப்பா சாப்பிடலாம்...வாண்ணு சாப்பிடலாம்...

ராமு: ஆமாம்மா ... சூடாச் சாப்பிட்டாதான் சுவையா இருக்கும்... வா பாரு...

சுலோ: என்னுங்க...புள்ளைங்களைக் கூட்டிகிட்டு வாங்க. எல்லார்க்கும் தட்டு போட்டுட்டேன்...

ஈஸ்: சங்கு ஊதியாச்சு ... வாங்க வாங்க!

★

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனைவியைத் திரும்பப் பெற யுத்தம்—இதற்கு படைவரிசைகள், வாள், ஈட்டி, கேடய மோதல்கள்! இராவண இராமப் போர்—இதிகாச இரத்தினம், காகுத்தன் —காவியம்! இராமாயணத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

பெண்ணை மீட்க, மண்ணைப் பெருக்க, பொன்னைக் குவிக்க இந்தப் பூவுலகில் பொல்லாத போர்கள் நடந்திருக்கின்றன. அதற்கு அவர்கள் சொல்லாத காரணங்களில்லை. அவர்களின் விசித்திர விளக்கங்கள் புளுகின் எல்லைக் கோட்டைத் தாண்டி விட்டன.

சூதாடவும், சோரம் போனவளைத் தேடவும் யுத்தம் என்று படிக்கிறோம் — இதிகாசங்களில்! இழந்த காதுக்காகப் போர் நடந்திருக்கிறது. சரித்திர காலத்தில் ஜெங்கின்ஸ் காதுப் போர் என்றே பெயர். இங்கிலாந்து வரலாற்றிலே இப்படியொரு சண்டை நடந்திருக்கிறது.

எனினும், நாட்டை ஏற்படுத்தி காக்க போர் வேண்டும் என்கிறார்கள் யுத்தப் பித்தம் பிடித்தவர்கள்.

இங்கிலாந்தில் கென்ட், நார்த்தம் பிரியா, கிழக்கு ஆங்கிலியா, மெர்ஸியா, வெஸ்ஸக்ஸ் ஸஸ்ஸக்ஸ் என்ற நாடுகள் ஏற்படுவதற்குள்ளும், அதற்குள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டு முதன்மை நிலைமையை அடைவதற்குள்ளும் எவ்வளவு போர்...இரத்த வெள்ளம்...பொடிப் பொடியான கோட்டைகள், கொத்தளங்கள்! அப்பப்பா, அழிவு, அழிவு, பயங்கர

அழிவு! 'அழிவுத் தாயின்' பேய்க் கூத்து நடந்துவிட்டது.

நாடுகள் ஏற்படுத்தப் போரின்றி இயலாது என்று காட்ட இந்த நிகழ்ச்சியைக் காட்டுவர்.

ஃ ஃ ஃ

மன்னனே பித்தன் — மகாராணியோ கர்வி! ஊர்ப் பெருமக்களுக்கோ பதவிப் பித்தம்—போரிலிருந்து திரும்பிவந்த வீரர்கள் தினந் தினம் கலகங்கள் விளைத்த வண்ண மிருந்தனர்.

அரசிக்கும், நாட்டிலேவலுவான பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த யார்க் பிரபுவுக்கும் போர் தொடங்கி விட்டது. மார்கரெட் மனம்போன போக்கெல்லாம் எதிர்த்திடத் திட்டமிட்டாள். மன்னனின் பித்தம் தெளியவே, மீண்டும் சாமர்செட் பிரபுக் குடும்பத்திற்கு செல்வாக்கு பிறந்தது. யார்க்குகள்விழித்தனர். போரிடத் துணிந்தனர்.

உள்நாட்டுப் போர் நடந்தது—விட்டுவிட்டு, தொடர்ந்தல்ல! முதலில் பிரபுக்களுக்குள், பிறகே எல்லோரும் கலந்துகொண்டனர்!

ஒரு கூட்டத்தவர் வெள்ளை ரோஜாவையும், மற்றொருகூட்டத்தார், சிகப்பு ரோஜாவையும் அணிந்து கொண்டனர். அதனால் இது பூப்போர் என்று அழைக்கப்பட்டது.

போர் விரும்பிகள் இதனைக் கூடத் தங்களுக்குச் சாதகமாக் கிடத் துடித்தனர்.

மன்னன் சார்லஸ், கொடுங்கோலனானன். வெறி பிடித்தவன் போலாடினான். வரி, வரி என்று மக்களின் உயிரைக் குடித்தான். கோபத்தை அடக்கி வந்தனர் மக்கள். பதினொரு ஆண்டுகள்வரை, அவன் கோணல் ஆட்சியைப் பொருட்படுத்தாது விட்டு வைத்தனர். பிறகோ அவன் தலையை இழந்தான், தன் தவறுகளுக்குக் குக் கழுவாயாக!

இந்த உள்நாட்டுப் போரைக் கூட மறப்பதில்லை அவர்கள். போருக்கு ஆதரவு திரட்டிடும் போக்கினர் இந்த உள்நாட்டுக் குழப்பத்தைக் காட்டி, இந்த நிகழ்ச்சியால் போர் இன்றியமையாததொன்று என்று முடிவுகூற முன் வருவர். நம்ப முடியாது அவர்கள் வார்த்தைகளை...நம்பக் கூடாது.

ஃ ஃ ஃ

கருணை உள்ளத்தை, அன்பு வெள்ளத்தைப் பெருக்கவந்த பரமபிதா ஏசுநாதரின் தொண்டர்களுக்கும், கல்லால் அடிபட்டும், கருத்துமாறு நபிகள் நாயகத்தின் வழி வந்தோருக்கும் நடந்த போர் —கேவலம், மதப்போர்—நினைத்தாலும் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது.

பாலஸ்தீனம் முகமதியர்களின் பிடியில் சிக்கியது.

ஏசுநாதரின் கல்லறையைச் சேவிக்க சென்ற பக்தசிரோன்மணிகள் சிரமிழந்தனர். சித்திரவதைக்குள்ளாயினர். யாத்ரீகர்கள் கொள்ளையடிக்கப்பட்டனர். கொடுமைப் படுத்தப்பட்டனர்.

கேட்டது, கிருஸ்துவ உலகம்! பொங்கியெழுந்து போருக்குக் கிளம்பிற்று. அன்பு அறம் மறைந்து விட்டது. ஆந்திர மறம் வென்றது.

அடித்தால், அடுத்த கன்னத்தைக் காட்டவில்லை. போரெடுத்துச் சென்று அந்த மாபாவிகளை அடக்குவோம் என்று கூவினர். அறத்தலைவர் போப்பும் அனல் தெறிக்கப் பேசினார். புனல் நடைப் பேச்சுக்கு அங்கு இடமே இல்லை.

இப்போரால் ஐரோப்பிய தேசங்களில் பல அழிந்திடும் நிலையடைந்தன. ஜெர்மனி நிலை குலைந்தது. இத்தாலி சக்தி குறைந்து தடுமாறிற்று. சிலுவைப் போர், இந்த சகத்தோர் மனதில் பதிய வைக்க வேண்டிய போர்.

இந்துவுக்கும், முகம்மதியனுக்கும், முகம்மதியனுக்கும், கிருத்துவனுக்கும், கிருத்துவனுக்கும், அதன் உட்பிரிவைச் சேர்ந்த மற்றொரு கிருத்துவனுக்கும், புத்த மதத்தவனுக்கும், சைனமதத்தவனுக்கும், சைவனுக்கும், வைணவனுக்கும், வடகலை வைணவனுக்கும், தென்கலை வைணவனுக்கும் போர்கள் நடந்திருக்கின்றன. நாகரீக சமூகம் நாணிக்கோண வேண்டிய நிகழ்ச்சி மதத்திற்காக, மக்கள் போரிட்டனர் என்பது!

ஃ ஃ ஃ

என் தேசம் ஸ்காட்லாந்து—இனி எந்த அந்நியனையும் ஆளவிடமாட்டேன். என் நாடு எனக்குப் பொன்னாடு—இதில் அயலான் அடியெடுத்து வைக்கச் சம்மதியேன். அவன் ஆணையிட்டு, என் தாயகத்தார் பணிந்து நடந்திடும் நிலையைக் காணக் கூடாது என் கண்கள்.

ஆங்கிலேயர் ஆளப் பிறந்தவர்களாக இருக்கட்டும்-அவர்களோடு நாட்டோடு அந்த ஆர்ப்பாட்டம் ஆடி ஒயட்டும். அது பற்றிய அக்கறை எனக்கில்லை.

எட்வர்ட் மன்னர்—அவருக்குப் படையுண்டு, பணம்உண்டு, பராக்குக் கூற ஆட்கள் உண்டு. எனக்கு அவை இல்லை. ஆனால் தணியாத சுதந்திரத் தாகம் உண்டு—நான் பிறந்த பூமி நாநிலத்தோர் நகைக்கும்படி பிறர் தாள் பணியக் கூடாது என்ற தளராத உறுதி உண்டு.

பாலியலைத் தங்கள் கைப்பொம்மையாக்கி, ஸ்காட்மக்களின் உயிரான உரிமையைச் சூறையிடத் திட்டமிட்ட சூது எனக்கு நன்றாகத் தெரிகிறது. பாலியலையும் எதிர்த்து ஒழித்து விட்டால் உரிமைப்போர் செத்துமடிந்துவிடுமா? விடுதலைப் பட்டாளம் களைத்து விடுமா?

சுதந்திர வீரன் வாலஸைத் தூக்கிலிட்டும், துளிர்த்தது எதிர்ப்பு—நினைவிலிருக்கட்டும். அடிமையின் மோகம் போய்விட்டது. இனி விடுதலை வேகம் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது...

இராபர்ட் புரூஸ் இப்படி ஒரு எதிர்ப்பை ஏற்படுத்தினான். பல முறைகள் தோற்றான். துவண்டு விடவில்லை. தொடர்ந்து போரிட்டான். இங்கிலாந்திற்கு, ஸ்காட் மக்கள் அடங்கி வாழ முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டான்.

சொத்திழந்தான், சுற்றத்தாரைத் துயரத்தில் தள்ளினான். சுகம் துறந்தான்—காடுகளில் ஒளிந்து வாழ்ந்தான். அப்பொழுதும் கலங்கினானில்லை. அடி பணிந்திடும் சிறுமைப் புத்தி அவனுக்கு வரவில்லை. எட்வர்டு இந்த வீரனைக் கண்டு வியந்தான்—பயந்தான். அவனுக்குக் கடைசியில் வெற்றி கிடைத்தது. உரிமைப் போர் நடத்திய புரூஸை உலகு பாராட்டிற்று,

பானக் பார்ன் என்ற இடத்தில் புரூஸ் ஆங்கிலப் படையை முறியடித்து, தங்கள் சுதந்திரவாழ்வை நிலை நிறுத்திக்கொண்டான்.

இந்தச் சுதந்திர வீரன் வாழ்வை —இம்மாதிரி உரிமைப் போர்வீரர்கள் வாழ்க்கைப் படப் பிடிப்புகள் பலவற்றைக் காட்டி—போரைக் குறை சொல்லாதே, அது இல்லாமல் உலக நடவடிக்கை நிறைவேறாது என்று பேசிட முனைவர். அவர்கள் வாக்கு சாதுரியம் வாய்ந்தவர்கள் என்று பாராட்டப் படுவார்களே ஒழிய, வாழ்க்கையை

செம்மையாக்கிடுவோர் என்று வாழ்த்தப்படமாட்டார்கள்.

ஃ ஃ ஃ

ட்யூப்ளேயும், கிளைவும் இந்திய வரலாற்று ஏட்டிலே இடம்பிடித்தனர். எப்படி? இங்கு நடந்த கர்நாடக யுத்தங்களினுல் தானே! முசபர் ஜங்குக்கும், நாசர் ஜங்குக்கும் பட்டமடைவதில் தகராறுஎன்ருல் ட்யூப்ளே முன்னேடினுன். கிளைவ் பின்னுல் சேர்ந்து கொண்டான்.

இப்படி அவர்கள், திரைகட்டி, மறைவுப் படுதா மாட்டிச்சண்டையிட்டனர். ஆட்சியைப் பறிக்கவா? தங்கள் அந்தஸ்தை உயர்த்தவா? நாடு பிடிக்கவா? நாநிலத்தில் நமக்கு ஏது ஈடு என்று பெருமை பேசிக் கொள்ளவா? இவைகளும் காரண மாகலாம். எனினும் வணிகத் துறையிலே அவர்கள் வளரத்தான் இத்தனைப் பாடுபட்டுச் சண்டையிட்டனர். உள்நாட்டு மன்னர்களின் மனக் கசப்பை, எண்ண எரிச்சலாக்கி, எரிச்சலை கோப வார்த்தைகளாக மாற்றி, வெப்பமான வார்த்தைகளை, விபரீதமான போர் நடவடிக்கைகளாகத் திருத்தித் தங்கள் வாணிபத்திற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள முயன்றனர்.

வணிகப் போட்டிகளினுல் சண்டை யுண்டாகத்தானே செய்யும். இதனை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று பேசுவர்.

இப்படி விதவிதமான காரணங்களைக் காட்டி, வகைவகையான போர்க் குறிப்புகளை நீட்டுவர். நாமும் வரலாறு படித்தவர்கள்— வாழ்ந்த மன்னர்களைப்பற்றி அறிந்தவர்கள் — நிகழ்ந்த போர்களை நினைவில் நிறுத்தியவர்கள் ஆகவே, புதியன அல்ல அவை, நமக்கு; எனினும் போர் வேண்டும் என்று பேசிடும் போக்குப் பிடிக்கவில்லை.

இன்னும் ஒரு விசித்திரம் பாருங்கள். உலகு முன்னேறி வருகிறது— நாகரீகம் நல்ல பாதையில் ஒடுகிறது-மனித உழைப்புக் குறைந்து, மூளை சக்தியின் மூலம் நன்மைகள் பெருகுகின்றன — விஞ்ஞானம் விநோத விளையாடல்கள் புரிந்து வேடிக்கை காட்டுகின்றது — மனிதன் முழு மனிதனுகிருன் — முழு மனிதன் 'தேவனு'கி விடுவான் போலிருக்கிறது — சந்திர மண்டலத்திற்கு குடிபோய் விடுவான் போலிருக்கிறது — செவ்வாயைச் சென்று தரிசிப்பான் என்று கூடப் பேசப்படுகிறது — எனினும் போர் ஒழியவில்லை.

சிறு நாடுகளில் நடந்த சண்டை. உலக நாடுகளை யெல்லாம் கட்டிச் சேர்த்துவிட ஆரம்பித்துவிட்டது. காதுப் போர், நூருண்டுப் போர், சுதந்திரப் போர் என்று பெயரிட்டது போய் உலகப் போர் என்று கூறவேண்டிய நிலை பிறந்து விட்டது.

அரசு அமைக்க, அந்நியரை விரட்ட, உரிமை பெற, வாணிகம் வளமாக...என்று காட்டிய காரணங்களோடு புதியதொரு காரணத்தையும் இணைத்துவிட்டார்கள். சொன்னுல் சிரிப்பு வரும். யோசித்தால் திகைப்பு வரும். அமைதியை நிலைநாட்ட யுத்தமாம்! சமாதானத்தை ஏற்படுத்தச் சண்டையாம்! அதுதான் உலக மகா யுத்தங்களுக்கு முதற்காரணமாம். எப்படி?

ஃ ஃ ஃ

போர் வேண்டாம் என்கிருர்கள் மக்கள். சமாதானத்தை நிலை நாட்ட மட்டும் சண்டை போடலாம் என்கிறது உலகு!

முதல் உலகப் போரும் இப்படித் தான் ஏற்பட்டது.

உலகத்தின் தலையாய நாடுகள் எல்லாம் போரில் ஈடுபட்டன. துணிவு மிக்க ஜெர்மனி துவக்கி வைத்தது. பெல்ஜியம், பின்வாங்கிப் பிறகு பாய்ந்தது. "பிரஞ்சு தேசமும் போரில் கலந்தது. ரஷ்யர்களும் போரிட்டனர் — இத்தாலியும் இதில் இரண்டறக் கலந்தது. பிறகு ருமேனியாவும் தன் பங்கைச் செலுத்த முன்வந்தது. இங்கிலாந்தும், அமெரிக்காவும் போரில் இறங்கின, கடைசியில்!

1914—18 நடந்த இந்தப் போர் ஒரு கொடிய நோய் — அழிவின் ஊர்த்துவத் தாண்டவம் தான் எங்கெங்கும்! "ஐயோ......" என்ற பதைப்பு! "மடிந்துவிட்டானே, என் மகன்" என்ற அழுகுரல். "இனி நான் என்ன செய்வேன்?" என்ற புலம்பல். "எங்க குடும்பம் நாசமாய்ப் போச்சே!" என்ற ஒப்பாரி — அப்பப்பா, கண்ணீர், அழுகை, சோகம், துக்கம், ஏக்கம் ......எங்கு பார்த்தாலும் இவைகளின் ஆட்சி!

எதைக் கேட்டாலும், இல்லை என்ற பல்லவி!

போரிலே ஈடுபட்ட வீரரின் தொகை மட்டும் ஆறரைக் கோடி. அதில் மடிந்தவர் ஒரு கோடி. 'மூளி'யானேர் மூன்று கோடி. சாவைத் தழுவிய சாதாரண பொதுமக்கள் ஒன்றரைக் கோடி. அனுதைகளானேர், ஆதரவிழந்தோர் இரண்டரைக் கோடி.

வெர்சேல்ஸ் என்ற இடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டனர்.

அடுத்து வந்தது புதியதோர் போர் அலை — 1938ல்! இட்லர் என்ற செருக்குக் கொண்ட ஜெர்மனியின் தலைவன் இதற்குக் காரணமானுன். இது முன்னதை விட எல்லாத் துறையிலும் வேகமாக, விறுவிறுப்பாக இருந்தது.

அழிவு வேலையில் அதை மிஞ்சி விட்டது!

இரண்டாவது உலக யுத்தம் என்ற பெயரை அடைந்துவிட்டது.

விஞ்ஞானம் வெறும் அழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்யவே பயன்படுத்தப்பட்டது.

அது ஒழிந்து, அமைதியை நாடி மக்கள் யாத்திரை கிளம்பினர். இதோ மற்றும் ஒரு போர்–உலக யுத்தம் என்று திடுக்கிட வைக்கும் குரல் கேட்கிறது!

யுத்தமின்றி எதுவும் செய்ய முடியாது என்று பேசிடுவோருக்குப் போரின் இந்தத் தொடர்ச்சிச் சித்திரம்தான் தெரியும். மற்றவை தெரியாது. அவர்கள் குருடராகி விடுவர். சில சமயங்களில்! போரின்றி உலகில் வாழ முடியும் —வாழ வேண்டும்! மனிதன் வளர்ந்துவிட்டான் என்ருல் யுத்தத்தை ஒழித்துக் கட்டவேண்டும். காட்டுக் குணமும், முரட்டுப் போக்கும், முட்டிக் கொள்ளும் பிடிவாதமும், எடுத்தற்கெல்லாம் அடி, உதை, குத்து வெட்டு என்று கூவிடும் குணங் கெட்ட கோபமும் ஆகா, அப்படியா சொன்னுன், அவனைப் பார்க்கிறேன் ஒரு கை என்ற ஆத்திரமும் அடியோடு அழிக்கப்பட வேண்டும்.

உலகு இந்த நல்ல பாடத்தை உணரும் நாள் வெகுவிரைவில் வருகும். ஃ

விற்பனையாளர்களுக்கு

காஞ்சி விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறேம்.

உரிமையாளர்,
"காஞ்சி", காஞ்சிபுரம்-3.

காஞ்சி 19—9—71 REGD NO. M. 8326

காஞ்சி

ஏழாம் ஆண்டு மலர்

தமிழகத்தின் தலைசிறந்த

எழுத்தாளர்கள்,

கவிஞர்கள்,

கலைஞர்கள்,

மற்றும்

அமைச்சர்கள், தலைவர்கள்

ஆகியோரின்

கருத்துக் கருவூலங்கள் நிரம்பியதாகத் தயாராகிறது!

அக்டோபர் முதல் வாரம் வெளிவருகிறது!

விலை ரூபாய் ஒன்றுதான்!

...ரியர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3...